பக்கங்கள் : பத்து

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 10 சனிக்கிழமை (27.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 331

# வான் பரப்பு முழுவதையும் பாதுகாக்கும் பலம் இல்லை!

## சீராக்கக் காலம் பிடிக்கும் என்கிறார் விமானப்படைத் தளபதி றொஷான்



கொழும்பு, ஒக்ரோபர் 27

நாட்டின் வான் பரப்பு முழுவதையும் பாதுகாக்கும் பலம் இப்போது விமானப்படைக்கு இல்லை. அதனை முழுமையாகச் சீராக்குவதற்கு இன்னும் ஐந்து அல்லது ஆறுவருட காலம் தேவை. அதுவரை சில பகுதிகள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்து உண்டு-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விமானப்படைத் தளபதி றொஷான் குணதிலக்கா.

எமது தாக்குதல் திறமை எந்த விதத்திலும் குறைந்து விட்டதாகக் கூறமுடியாது. எனினும் நாம் இழந்த வான் கலங்களுக்குப் பதிலாக புதியவற்றை விரைவில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம் - என்றும் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விமானப்படைத்தளபதி சொன்னார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பால்மாவின் விலை 41 சதவீதம் அதிகரிப்பு!

பால்மாவின் விலையை 41 சதவீதத்தால் அதிகரிக்க நுகர்வோர் விவகார அமைச்சு அனுமதி அளித்துள்ளது. இந்த அறிவிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் பிரகாரம் 400 கிராம் கொண்ட அங்கர் பால்மாவின் விலை 80 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 400 கிராம் கொண்ட அங்கர் மால்மா பைக்கற் 205 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

41 சத வீத விலை அதிகரிப்பு சகல பால்மா வகைகளுக்கும் பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## முகமாலைப் பகுதியில் நேற்றும் மோதல்

கொழும்பு, ஒக. 27

யாழ்ப்பாணம் - முகமாலையிலுள்ள படையினரின் முன்னரங்க நிலையில் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'சண்டே லீடர்' செய்தியாளர் பிணையில் விடுப்பு

கொழும்பு,ஒக்.27

அமைச்சர் ஒருவரின் முறைப்பாட்டை அடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 'த சண்டே லீடர்' பத்திரிகையின் இளம் ஊடகவியலாளரான ஆதர் வாமணனை பிணையில் விடுவிக்குமாறு கல்கிஸை பிரதம நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

பிரதம நீதிவான் அயேஷா ஜயசேன முன்னிலையில் ஆதர் வாமணனை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று ஆஜர் செய்த போதே அவரை தலா ஒரு லட்சம் ரூபாவுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் தாக்குதல்களிலிருந்து தமிழரைக் காப்பாற்றுங்கள்!

## ஆர்பர் அம்மையாரிடம் தமிழ்க் கூட்டமைப்பு அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 27

அரசின்தாக்குதல்நடவடிக்கையில்இருந்து இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரிடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, லூயிஸ் ஆர்பருக்கு அவசர மனு ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அதிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நீங்கள் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இங்கு இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை நன்கு அவதானித்திருப்பீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.

இந்த மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் -/அவற்றைக் கண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உடல்களை நிர்வாணமாக்கியமை: உடனடி விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு!

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தகவல்

கொழும்பு, ஒக்.27

அநுராதபுரம் தாக்குதலில் உயிரிழந்த புலிகளின் ஆடைகளை களைந்து அவர்களின் உடல்களை நிர்வாணமாக்கியமை தொடர்பில் உரிய விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று அமைச்சரும் அரச பாதுகாப்புப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார்.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அநுராதபுரத் தாக்குதலில் கொல்லப்பட்ட புலிகளின் உடல்களை செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊடாக புலிகளிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அனுப்பக்கூடிய நிலையில் உடல்கள் இல்லாமையால், அநுராதபுர நீதிமன்றத்தின் உத்தரவின்படி அவ்வுடல்கள் அரசால் அடக்கம் செய்யப்பட்டன. பிரேதப் பரிசோதனை மேற்கொள்வதற்காக புலிகளின் உடல்களில் இருந்து ஆடைகள் நீக்கப்பட்டன. ஆனால் அவ்வுடல்களை அவமானப்படுத்தும் நோக்கில் நாம் அவ்வாறு செய்யவில்லை.

எனினும் இது முறையற்ற விதத்தில் இடம்பெற்றதா என்று கண்டறிவதற்காக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் - என்றார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## புதிதாக வான் தளபாடங்களை கொள்வனவு செய்ய ஏற்பாடுகள்

### பசில் ராஜபக்ஷ தகவல்



கொழும்பு, ஒக். 27

அநுராதபுரம் விமானப் படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அழிக்கப்பட்ட விமானங்கள் உள்ளிட்ட வான் தளபாடங்களுக்குப் பதிலாக புதியன நட்பு நாடுகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும். இது தொடர்பாக அரசு சம்பந்தப்பட்ட நாடுகளுடன் இப்போது தொடர்பு கொண்டுள்ளது.

ஜனாதிபதியின் சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அழிக்கப்பட்ட விமானங்களுக்குப் பதி

(10ஆம் பக்கம் பார்க்க)

# அநுராதபுரத்தில் இழக்கப்பட்டவற்றுக்கு பதிலாக புதிய வான் கலங்களை வாங்குவதற்கு முடிவு

கொழும்பு,ஒக்.27

அநுராதபுரம் விமானத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இழக்கப்பட்ட எட்டு வான் கலங்களுக்கு பதிலாக புதியவற்றைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு சபை முடிவு செய்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடந்த பாதுகாப்புச் சபையின் வாராந்தக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, விமானப்படைத் தளபதி றொஷான் குணதிலக, படைகளின் பிரதம அதிகாரி டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் விக்ரர் பெரேரா உட்பட பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சம்பவம் தொடர்பான விவரமான அறிக்கையை விமானப்படைத்தளபதி சமர்ப்பித்தார். முன்னுரிமை அடிப்படையில் தேவையான வான்கலங்களைக் கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுக்கு பணிப்புரை விடுத்தார்.

விமானத்தளங்கள் மற்றும் பாதுகாப்புத் தளங்களின் மேலதிக பாதுகாப்பு தொடர்பாகவும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. (அ-1)

# வவுனியா கல்மடுவில் நிலக்கண்ணி வெடித்து ஆறு இராணுவத்தினர் பலி; நால்வர் படுகாயம்

கொழும்பு,ஒக்.27

வவுனியா, கல்மடுப் பகுதியில் படையினர் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, புதைந்திருந்த கண்ணிவெடி ஒன்று தவறுதலாக வெடித்ததில் 6 படையினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருக்கின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் 1 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மேலும் 4 படையினர் படுகாயமடைந்தனர்.

"அந்தப் பகுதியில் ஏற்கனவே படையினர் மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக நிலக்கண்ணி வெடிகளைத் துப்புரவாக்கியிருந்தனர். எனினும், நேற்று மீண்டும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டபோதே அந்த இடத்தில் குண்டு வெடித்தது" - என்றும் பிரிகேடியர் தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்பையடுத்து படையினரும்,பொலிஸாரும் இணைந்து தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

அனுமதி
ociative Society
Regd. No. 1/1741
Date. 05-01-1984

# வாழ்த்துகின்றோம்



இன்று 27.10.2007
பம்பலப்பிட்டி புதிய
கதிரேசன் மண்டபத்தில்
பரத நர்ட்டிய
அரங்கேற்றம் நிகழ்த்தும்
**யோகலிங்கம் - கீதா**
தம்பதிகளின் புதல்விகள்
**சிந்தூரி - நிருதி**
ஆகியோர்களை கலை
மணம் பரப்ப
வாழ்த்துகின்றோம்.

சிந்தூரி – நிருதி

அன்புடன் - அல்வாய்
மாமன் மாமிமார்கள்,
'ஸ்ரீமல்லிகை', ஸ்ரீதரன் - மல்லிகா குடும்பம்,
'யோகமஹால்', யோகரத்தினம் - ரஞ்சினிதேவி குடும்பம்,
'இராஜகேந்திரா', குமரதாசன் - விஜயா குடும்பம்

(67271)

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்
"மகாஜனன்" வெளியீடும் - 2007

**காலம்:** 29.10.2007 திங்கட்கிழமை காலை 8.30 மணி
**இடம்:** பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
**தலைவர்:** திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் (அதிபர்)
**பிரதமவிருந்தினர்:** திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம் (பிரதிக்கல்வி பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
**நினைவுப் பேருரை:** திரு. ஸ்கந்தவரதர் ரமேஸ் (விரிவுரையாளர், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
**சிறப்புவிருந்தினர்:** திரு.சற்குணானந்தன் கைலாசநாதன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
**கௌரவ விருந்தினர்:** கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (JP)
கலாநிதி சதாசிவம் கனகசபை
வைத்திய கலாநிதி திருமதி சிவபாதசுந்தரி கனகசபை
**பரிசில்கள் வழங்கல்:** திருமதி. கலைவாணி சுந்தரசிவம் (ஆசிரியை)
**மலர் ஆய்வுரை:** கலாநிதி த.கலாமணி (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**நன்றியுரை:** திரு. கந்தசாமி இரவீந்திரா (செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(67334) -கல்லூரிச் சமூகம்

## கண்ணீர் அஞ்சலி

நடேஸ்வராக் கல்லூரியின் அதிபர் பொ.அமிர்தலிங்கம் அவர்களின் அன்புச்சகோதரன்

**பொ.சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்கள், நடேஸ்வராக் கல்லூரி கனிஷ்ட வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் சுந்தரலிங்கம்



அருவம்பற்று, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுந்தரலிங்கம் 26.10.2007 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பொன்னம்பலம்-பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும் அமிர்தலிங்கம்(அதிபர், நடேஸ்வராக்கல்லூரி, தெல்லிப்பழை, முன்னாள் ஆசிரியர், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்.பட்டப்படிப்புக்கள் கல்லூரி விரிவுரையாளர்.) அவர்களின் அன்புச்சகோதரனும் திருமதி சந்திரகுமாரி அமிர்தலிங்கம்(ஆசிரியை, யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி) அவர்களின் மைத்துனரும், அபிராமி (தரம் 10 வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) அவர்களின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2007) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி தெற்கு இந்து மயானத்திக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.அமிர்தலிங்கம் (சகோதரன்)
(அதிபர், நடேஸ்வராக்கல்லூரி)

அளவெட்டி. (67353)

## நாகன் சுப்பையா

கோண்டாவில், தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட நாகன் சுப்பையா நேற்று (26.10.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி, கமலாதேவி, சந்திராதேவி, முத்துலிங்கம்(முத்தொளி வீடியோ, யாழ் பல்கலைக்கழக நூலகம்), நாகேஸ்வரி, விக்கினேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற கந்தவனம், சின்னையா, சடாசிவம், பாலகிருஷ்னர், உதயகுமார்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (27.10.2007) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
முத்துலிங்கம்
(மகன், முத்தொளி வீடியோ)

## வவுனியாவில் மூன்று இடங்களில் படையினரும் புலிகளும் மோதல்

வவுனியாப் பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் 3 வெவ்வேறு இடங்களில் விடுதலைப் புலிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் குறிப்பிட்டிருக்கின்றது. வவுனியா-கதிரவிட்டான் குளம், பாலமோட்டை மற்றும் பரத்தகண்டல் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இந்த மோதல்களில் 8 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் படைத்தரப்பினர் கூறியிருக்கின்றனர். மேலும் பலர் காயமடைந்திருக்கலாம் எனவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எதுவிதத் தகவலும் வெளிவரவில்லை.

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு,நடக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ஒரு தொகை ஆயுதங்களை மீட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கின்றது.

ரி - 56 ரகத் துப்பாக்கிகள்-200, 12.7 மில்லிமீற்றர் ரக ஆயுதங்கள் - 50 மற்றும் கைக்குண்டு-01 ஆகியவற்றையே படையினர் மீட்டிருக்கின்றனர் என்று ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

**விற்பனைக்கு**

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கோழி 1Kg 600/= மட்டும்.
தாசன் பாம்
No.: 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 2ஆம் இடத் தைப்பெற்ற யாழ்/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவனும் தவநேசன் - ஜீவானந்தி தம்பதியரின் புதல்வன் புஷிந்தன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல அரிய சாதனைகளைப் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாள் துணை நிற்பாளாக. அத்துடன் இவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் திரு.அன்பழகன் தாய், தந்தை அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சி. செல்லம்மா (அப்பம்மா), சி. செல்வராசா (பெரியப்பா குடும்பம்),
சி. பத்மாவதி (மாமி குடும்பம்), சி. ராயூ (சித்தப்பா குடும்பம்),
சி. சிவகுமார் (சித்தா குடும்பம்)

**காணி விற்பனைக்கு**

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (பழைய இலங்கை வங்கிக்கு அருகாமையில்) 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: அதிபர் விடுதி,
இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
தொ.பே. 0602212933
சந்திக்கும் நேரம்: மாலை 4 மணிக்கு பின்னர்.

## சேர்த்து வாசிக்கவும்

நேற்றைய (26.10.2007) உதயனில் பிரசுரமான வல்லிபுரம் மகேந்திரராஜாவின் மரண அறிவித்தலில் அவரது மருமகள் அல்லியின் பெயர் தவறுதலாக விடுபட்டு விட்டதாகவும் அதனைச் சேர்த்து வாசிக்குமாறும் விளம்பரதாரர் கேட்டுள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வ.சோமசுந்தரம் அவர்களின் அன்புச்சகோதரி செல்வி **தவமணி அருளம்பலம்** அவர்கள் சிவபதம் எய்தியமையறிந்து கண்ணீரஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலைச்சமூகம்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் பொன்னம்பலம் தயானந்தன் அவர்களின் அன்பு மாமனார்

**கந்தையா குணரத்தினம்**

அவர்கள் 24.10.2007 இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்
[illegible]
[illegible]

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி கல்லூரிச் சமூகம்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஷ்ணபிள்ளை சின்னத்தங்கம்



வல்வெட்டித்துறை, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் பரந்தனை வதிவிடமாகவும் தற்பொழுது பிரான்ஸ் ப்டிளேமினில் வாழ்ந்தவருமான சி.சின்னத்தங்கம் 23.10.2007 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், கிருஷ்ணாநிதி (ரஞ்சன்-டென்மார்க்), கிருஷ்ணமதி (பிரான்ஸ்) கிருஷ்ணதாசன் (தாசன்-சுவிஸ்), கிருஷ்ணவேணி (வேணி-இந்தியா) ஆகியோரின்அன்புத் தாயாரும், கணேசநாதன் (பாப்பா-பிரான்ஸ்), ரேணுகா (டென்மார்க்), தமிழினி (சுவிஸ்), ரஜிதன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் 29.10.2007 திங்கட்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:
கிருஷ்ணாநிதி (ரஞ்சன்- டென்மார்க்) Tel: 0045 29 66 89 12
கணேசநாதன் (பாப்பா - பிரான்ஸ்) Tel: 06 50 00 36 10 - 01 48 65 98 26
கிருஷ்ணதாசன் (தாசன் - சுவிஸ்) Tel: 0041 79 22 77 592
(67341) கிருஷ்ணவேணி (வேணி - இந்தியா) Tel: 0091 99 41 28 28 93

## செல்வி அருளம்பலம் தவமணி

ஒட்டுவெளி, மிருசுவிலை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருளம்பலம் தவமணி நேற்று (26.10.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அருளம்பலம்-செல்லக்கண்டு தம்பதியரின் அன்பு மகளும் வனிதாமணி(ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), விக்கினேஸ்வரராசா(சாரதி), செல்வராசா(உதவி விவசாயப்பணிப்பாளர், திருகோணமலை), அரியராசா(கனடா), குபேந்திரராசா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோமசுந்தரம்(ஆசிரியர்), சிவஞானசோதி, சாந்தி, ராகினி(கனடா), புஸ்பா(கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போற்பதி வீதி,
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:-
க.அருளம்பலம் (தந்தை)

## திருமதி ஆறுமுகம் தங்கச்சிப்பிள்ளை (பாப்பா)



சுழிபுரம், காசாவைப் பிறப்பிடமாகவும் நீர் வேலி வடக்கு, முன்கொடையைப் வசிப்பிட மாகக் கொண்டவரும் தற்சமயம் கொழும்பில் வசித்தவருமாகிய தங்கச்சிப் பிள்ளை ஆறு முகம் (பாப்பா) 26.10.2007 காலை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாரிமுத்து - லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், சத்தியமூர்த்தி (கொழும்பு), உமாபதி (கொக்குவில்), சோதிலிங்கம் (சுவிஸ்), ரேணுகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அகலிகை (கொழும்பு), பரமேஸ்வரன் (ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி), றமணி (சுவிஸ்) கமலநாதன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், சர்மிலேந்திரன் (கொழும்பு), துவாரகன், கஜேந்தினி, மகிழினி (கொக்குவில்), பிருந்துவி, துளசிதன் (சுவிஸ்), பவித்திரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்தின மலர்ச்சாலையில் இன்று (27.10.2007) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை 28.10.2007 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடை பெற்று, மாலை 4 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்:
0714306208, 0777741172

தகவல்:
ஆ.சத்தியமூர்த்தி
(மகன்)

(சி/54139)

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் – 29/10/2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி விவசாயிகளுக்கு விதை நெல் விவசாயத் திணைக்களத்தால் இலவசம்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் தருவிக்கப்பட்ட விதை நெல் தென்மராட்சி பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள விவசாய சம்மேளனங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு மீசாலை, புத்தூர் பகுதியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து ஒவிதைநெல் வழங்கப்பட்டது.

குடமியன், மிருசுவில் வடக்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய பகுதிகளுக்கு சாவகச்சேரி விவ்சாய போதனாசிரியர் சு.விஜயகுமார் நேரடியாக சென்று விதை நெல்லை வழங்கியுள்ளார்.

குறைந்த கால உற்பத்தி இனமான பிஜி 353, பிஜி 361 ஆகியவற்றுடன் உரவகைகளும் நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

குடாநாட்டில் விதைநெல்லுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டினைத் தவிர்க்கும் முகமாக இந்த இன விதைநெல்களில் உற்பத்தி செய்யப்படும் நெல் அடுத்த வருடம் ஏனைய நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பிரதேசத்தில் ஓர் ஏக்கருக்கு மேல் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் அனைத்து விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த 156 நெற்செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் கூடுதலான விதை நெல் பிரதேச கமநல நிலையங்களுக்கு வழங்கப்பட்டதையடுத்து இதுவரை விதைப்பு மேற்கொள்ளாத நெற்செய்கையாளர்களுக்கு விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை விதைப்பினை மேற்கொள்ளாத நெற்செய்கையாளர்கள் அந்தந்த விவசாய சம்மேளனங்கள் ஊடாக சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் சு.விஜயகுமாருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## வடமராட்சிப் பகுதியில் மோட்டார் திருடிய நபர் பொலிஸாரால் கைது!

பருத்தித்துறை,ஒக்.27

வடமராட்சியில் பல வீடுகளில் நீர் இறைக்கும் மோட்டர்களை திருடிய நபரொருவர் நெல்லியடிப் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார். திருட்டு மோட்டார்களை விற்பனை செய்து வந்த மோட்டர் திருத்தும் கடைக்காரர் தலைமறைவாகியுள்ளார்.

கரவெட்டி, கரணவாய் மேற்கைச் சேர்ந்த தர்மராஜா கலைச்செல்வன் என்பவரே பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார். இவரை விசாரணை செய்த நெல்லியடிப் பொலிஸார் நீர் இறைக்கும் மோட்டார்களையும் 5,000 ரூபா பணத்தையும் மீட்டனர்.

இச்சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி அவரை அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (1-28)

## வீட்டுத் தோட்ட உள்ளீடுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.27

மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைக்குரிய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பத்து பயனாளிகளுக்கு அண்மையில் வீட்டுத் தோட்டத்திற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன. (203-207)

## ஜோண் பொஸ்கோவில் பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.27

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவிற்கு யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் பிரதம விருந்தினராகவும் யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சிவபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினராக புனித யுவானியார் ஆலய பங்குத் தந்தை எஸ்.ஜே. கியூ. ஜெயரஞ்சன் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் யாழ். பலக்கலைக்கழக வணிக முகாமைத்துவபீட பீடாதிபதி க. தேவராஜா பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளார். (203)

# நிகழ்வுகள்

நவாலி,ஒக்.27

வலிகாமம் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் கூட்டுறவுத் தின விழாவும் புலமைப்பரிசில் வழங்கலும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலிகாமம் கொத்தணியின் மானிப்பாய் கலையரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (203-100)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.27

சவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட தையற்பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்ட பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நாளைமறுதினம் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி யாழ். வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் இடம்பெறும்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்ட ஆளுநர் லயன் செ.இராகவன் கண்காட்சியினை ஆரம்பித்து வைப்பார்.

நான்காம் கட்ட தையற் பயிற்சிகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் யுவதிகளைக் கழக அலுவலகத்திற்கு வருகை தருமாறு கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக். 27

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென பிரதேசசெயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக். 27

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்ட கிளைச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது (203)

* * *

வலி.தென்மேற்கு, ஒக். 27

மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழு நடத்தும் சர்வதேச சிறுவர் தினவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிராம அலுவலர் இ.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர் க.இளங்கோஞானியார் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு நிறுவன திட்ட அலுவலர் திருமதி சுதர்சன் சர்மிலா, வலி. தென்மேற்கு பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வே.அருந்தவராசா ஆகியோர் கலந்துகொள்வர். (203-131)

* * *

கட்டைவேலி, ஒக். 27

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபர்கள் நினைவுநாளும் பேராசிரியர் அ. துரைராசா நினைவுநாளும் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு திருச்சபை மண்டபத்தில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.பாலசுப்பிரமணியம் தலை மையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவதுறைப் பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார். (203-275)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.27

இளைஞர் கணனி சேவைகள் நிறுவனத்தினரால் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் ஐ.சி.ரி. மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் ஒரு நாள் கணனிப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது. (203)

## உலர் உணவுப் பொருள்களின் விவரங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.27

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களில் உலர் உணவுப் பெறும் குடும்பங்களின் விவரங்களைத் திரட்டிய விண்ணப்பப் படிவங்களை இதுவரை சமர்ப்பிக்காத கிராம அலுவலர்கள் இன்று முற்பகல் 10 மணிக்கு முன்னர் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவில் அவற்றை ஒப்படைக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (203-207)

# தேசியப் போட்டிகளில் சாதனை படைக்கும் விளையாட்டு வீரர்களுக்குப் பாராட்டுகள் மட்டுமல்ல பயிற்சிகளும் வசதிகளும் மிகவும் அவசியமானவை

யாழ்.மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் இம்முறை இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் பதக்கங்களை வென்று வடமாகாணத்துக்கும் குடாநாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியிலும் தமது பயிற்சிகளை மேற்கொண்டு மனத்துணிவுடன் போட்டிகளில் பங்குபற்றி அவர்கள் பெற்ற வெற்றிகள் நிச்சயம் பாராட்டப்படவேண்டியவை.

குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும் அவர்கள் இந்தச் சாதனைகளைப் படைத்துள்ளமை குறித்து விளையாட்டு ஆர்வலர்கள் பலர் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

**விளையாட்டு**

வெற்றி பெற்றவர்களைக் கௌரவிக்கும் முகமாக அவர்களின் பாடசாலைகளில் பாராட்டு விழாக்களும் நடத்தப்படுகின்றன. இவை அனைத்தும் அவர்கள் பெற்ற வெற்றிக்குரியது.

எனினும் அந்த வீரர்களின் எதிர்கால வளர்ச்சி குறித்து யாரும் இதுவரை சிந்திக்கவில்லை என்றே கூறவேண்டும். வெறும் பாராட்டு விழாக்களை மட்டும் நடத்தி அவர்களின் எதிர்கால ஆற்றலை வளர்த்துவிடமுடியாது.

கடந்த 5 ஆண்டுகளுக்குட்பட்ட காலப்பகுதிக்குள் பாடசாலைகளில் இருந்து விரல் விட்டு எண்ணக்கூடிய மாணவர்களே தேசியமட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளனர்.

இவர்களைப் பாராட்டி விழா எடுப்பதுடன் பத்திரிக்கையில் விளம்பரம் போடுவதுடன் தமது பணி முடிவடைந்து விடுவதாகப் பலர் எண்ணுகின்றனர்.

தென்னிலங்கையைப் பொறுத்த வரை இவ்வாறான வீரர்களுக்கு உதவித் தொகைகள், பயிற்சி ஏற்பாடுகள் உள்ளிட்ட பல வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இங்கு அப்படியானதொரு வசதிகளும் வீரர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

அண்மையில் இடம்பெற்ற ஆசிய மெய்வன்மைப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை வென்று சாதனை படைத்தவர் சுசந்திகா ஜயசிங்க. இந்தப் பதக்கத்தைப் பெறுவதற்கு தனக்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கியவர் சாதனையாளரும் இலங்கைத் தமிழ் தலை சிறந்த வீரருமான, எதிர்வீரசிங்கம் என்று சுசந்திகா தெரிவித்திருந்தார்.

அண்மையில் மானிப்பாய் மகளிர் கல்லூரி உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளது.

இதேபோன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் தட்டெறிதலிலும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் கோல் ஊன்றிப் பாய்தலிலும் தேசிய மட்டத்தில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்கள். இந்த வெற்றி எவ்வளவு நெருக்கடிகளுக்குள் பெறப்பட்டது, இவர்களுக்கான பயிற்சிகள் எந்தளவுக்கு வழங்கப்பட்டன, பயிற்சியாளர்களின் வெளிப்பாடுகள் எந்தளவுக்கு இந்த வெற்றியாளர்களுக்கு [illegible] கவனம் எடுக்க வேண்டிய தேவையும் அவசியமும் இப்போது எழுந்துள்ளது.

இன்று வெற்றியாளர்களாக உள்ளவர்கள் பொருளாதார வசதிகள் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்களுடைய ஆற்றல் தேசிய மட்டத்துடன் முடிவடைந்து விடக்கூடாது. அவர்களைத் தீட்டி மேலும் உண்மையாக்கும் பொறுப்பும் கடமையும் எமது சமூகத்திற்கு உண்டு.

தேசியப் போட்டிகளுக்கு அப்பால் சர்வதேசப் போட்டிகளில் இவர்கள் பங்குபற்றுவதற்கு வழிகாட்டுதல்களை வழங்கவோ, சர்வதேசப் போட்டிகளின் விதிமுறைகள் பற்றி விளக்கம் அளிக்கவோ எந்தவிதமான ஏற்பாடுகளும் இங்கு மேற்கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக எமது வீரர்கள் தேசிய மட்டத்துடன் முடங்கி விடுகிறார்கள்.

## சாதனைகளைத் தக்கவைப்பதற்கு சரியான வழிகாட்டல்கள் தேவை

**விண்ணன்**

யாழ். குடாநாட்டில் இன்று தொலைக்காட்சிகளில் விளையாட்டுத்துறையைக் கூட உரிய முறையில் பார்க்க வழியற்ற நிலையே காணப்படுகின்றது. இதனால் இளம் வீரர்கள் காலத்தினால் உருவாக்கப்பட்டு தமது மட்டுப்படுத்திய வளத்தின் மூலம் தமக்குள் கிடந்த திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

சுகததாச விளையாட்டு மைதானம் என்பது தேசியமட்டத்திலும், சர்வதேசமட்டத்திலும் போட்டிகள் இடம்பெறும் மைதா[illegible]னத்தைக் கூட இத்த[illegible]டன் கூடியதை எமது வீர வீராங்கனைகள் தற்போதுதான் முதல் தடவையாக கண்டு இருப்பார்கள்; அனுபவித்து இருப்பார்கள்.

அவர்கள் அத்தகைய வசதியை தேடாவிட்டாலும் இவர்களைத் தொடர் பயிற்சிகள் மூலம் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வயது வந்த பிள்ளைகளை வீட்டுக்கு வெளியே செல்ல விடுவதற்கும் பெற்றோர் விரும்புவதில்லை.

மறுபுறத்தே பிள்ளைகள் விளையாட்டில் ஆர்வம் காட்டினால் அதற்கு ஊக்கம் கொடுக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு. கல்விக்கே அவர்கள் முன்னுரிமை வழங்குவார்கள். இத்தகைய நிலையில் இந்த வீரர்கள் தொடர் பயிற்சிக்கு கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு, கடமையென்பது மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் காணப்படும் விளையாட்டு அலுவலர்கள், பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உரியதாகும்.

இவ்வீரர்களுக்கு தொடர் பயிற்சிகளை வழங்க வேண்டுமாக இருந்தால் விசேடமாகப் பயிற்சியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இதற்கு விளையாட்டு அமைச்சு மற்றும் மாகாண விளையாட்டுத் திணைக்களம் ஆகியன நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அண்மையில் யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் வவுனியாவில் இடம்பெற்ற மாகாணப் போட்டியில் கலந்து கொண்டு திரும்பியதைத் தொடர்ந்து உயர் அதிகாரிகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். அதிகாரிகளுக்கிடையிலான பதவிப் போட்டியே இதற்குக் காரணம்.

எனவே பதவி ஆசைகளைக் களைந்து விட்டு எமது வீரர்களை தொடர்ந்தும் விளையாட்டுத் துறையில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இதுவிடயத்தில் விழிப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதே வீரர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமால் (BIMAL) ஆயுள்வேத மருந்துகள்

★ அரிஷ்ட வகைகள் ★ ஆசவ வகைகள்
★ வாசகா சிறப் ★ லேகிய வகைகள்
★ குளிசை வகைகள் ★ சூரண வகைகள்
★ குவாத வகைகள் ★ கல்க வகைகள்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள**

Manufactured By:
BIMAL OSU(PVT) LIMITED,
KOLONNAWA,
SRILANKA.

வட மாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப்பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்).

(சி/54024)



இலங்கையின் கல்வி வரலாற்றில் முதலாவது தமிழ் மொழி மூலமான
**''விசேட கல்வித்துறை நூல்''**
**வெளிவந்துவிட்டது!**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்வித்துறை விரிவுரையாளர் **திரு.த.சிவகுமார்** அவர்களின்

### ''விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்''



பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், கல்விப்பணிப்பாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும் பயனுள்ள விடயங்கள் அடங்கிய நூல்

**இலங்கை முழுவதற்குமான ஏக விநியோகத்தர்கள் :**
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,** (67317)
கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வி.ஜெகதீஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தை

### கந்தையா குணரத்தினம்

அவர்களின் அமரத்துவமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் பிரிவால் துயருறும் குடும்பத் துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

யா/பெரியபுலம் ம.வி. (67330) ஆசிரியர், உத்தியோகத்தர், நலன்புரிச்சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன கணித ஆசிரியர்
**திரு.சசிகாந்** அவர்களின் அம்மம்மா

### திருமதி சின்னம்மா நடேசமூர்த்தி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**Brain Power Institute.**
குருநகர்.

(67329)

## 45ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றிநவிலலும்

பூமியின் மடியில்
04
*
08
*
1941



ஆண்டவன் அடியில்
13
*
09
*
2007

### அமரர் இரத்தினேஸ்வரி சண்முகராசா

**(குமரகோட்டம், கோண்டாவில்)**

அன்னாரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி, தந்தி, கண்ணீர் அஞ்சலி சுவரொட் டிகள் மூலமாகவும் தங்கள் துயரையும் அனுதாபத்தையும் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தோளோடு தோள் சேர்ந்து பேருதவிகள் பல புரிந்த கிராம சேவையாளர்கள், உத்தியோகத்தர்கள் மருத்துவர், தாதிமார்கள், அயலவர்கள், நண் பர்கள் எல்லோருக்கும் எங்கள் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (27.10.2007) மு.ப.10.30 மணியளவில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)*

தொ.பே 021 222 7372. (67299) **குடும்பத்தினர்.**

# பருத்தித்துறை கிழக்கில் தொழிற்பயிற்சி நிலையம்

பருத்தித்துறை, ஒக். 27

பருத்தித்துறை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் வடக்கு கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தி திட்ட நிதியுதவியினால் சுமார் 21 லட்சம் ரூபா செலவில் தொழிற்பயிற்சி நிலையமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இத்தொழில் பயிற்சி நிலையக் கட்டட அமைப்பு வேலைகளை பெறுபேற்றுச் செய்து வருகின்றது.

இத்தொழில்பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான 21 லட்சம் ரூபா பெறுமதியான காணி யாழ். ஆயரின் உதவியினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(203-218)


## புறொயிலர்விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர்
1kg 550 ரூபா மட்டும்.
குமரன் பாம், 227, பிறவுண் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம். (67331)



## வாடகைக்கு அறை தேவை

யாழ்.நகரை அண்மித்ததாக போக்குவரத்து வசதிகள் உள்ள வீதியில் அலுவலகப் பயன்பாட்டிற்கேற்ற அறை தேவை.
தொடர்பு:- இல.3, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9334 (67327)



## விற்பனைக்கு

மில் உபகரணங்கள் (அரைக்கும் ஆலை) விற்பனைக்குண்டு.
**தொடர்பு:**
**V.P.N மில்**
கண்டிவீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
T.P: 0776127316 (சி/54137)


## தவறிவிட்டது

கடந்த 24.10.2007 அன்று குருநகருக்கும், இராசாவின் தோட்ட வீதி, இலுப்பையடி, நாவலர் வீதி வரையான பயணத்தின்போது மோட்டார் சைக்கிலின் (C 90 - ECCONA POWER - 86 SRI 9380) சகல ஆவணங்களும் அடங்கிய கறுப்பு நிறப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஐ.அருளானந்தம், 49/4 A, யாழ்.வீதி, சிறாம்பியடி என்னும் விலாசத்தில் அல்லது 222 6533 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (67337)


## விற்பனைக்கு

''ஜெர்மன் அல்பேட்'' இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் 35நாள்கள் கொண்டவை. விற்பனைக்கு இருக்கின்றன.
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**
சந்துஜன் அழகுச் சோலை,
நெல்லியடி, கரவெட்டி. தொ.பே:-021 226 3436 (67343)



## கோழி இறைச்சி விற்பனை

புறொயிலர், ஊர்ச்சேவல்கள் என்பன வேண்டிய நிறைகளில் மிக மலிவான விலைகளில் எந்தநேரமும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:- **மல்ரிபாம் சென்ரர்**
61, இராமநாதன் வீதி, கலட்டி.
கிளை:- சுவாமியார் வீதி,
அந்தோனியார் கோவிலடி, கொழும்புத்துறை.
(67336)


**புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**புலோலி கிழக்கு, பருத்தித்துறை**
**மின் பிறப்பாக்கி**
**விற்பனைக்கான கேள்வி கோரல்**

சங்கம் சிறிது காலம் பாவனையில் ஈடுபடுத்திய நல்லதரத்திலுள்ள பெற்றோலில் இயங்கும் 5-K.V.A SH 7000 DX (ELE MAX) ரக GX 390 கொண்டா 13.0 இயந்திரம் இணைக்கப்பட்ட மின்பிறப்பாக்கி விற்பனைக்உண்டு. பெற்றுக்கொள்ள விரும்புவோர் 05.10.2007ற்கு முன்னர் கேள்விக் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

**காரியாலய நேரங்களில் மின்பிறப்பாக்கியை பார்வையிடலாம்.**

**பொதுமுகாமையாளர்,**
புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
(சி-54136)

## கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி ப.நெ.வ.அ.கூ.சங்கத்தின்
கிளைமுகாமையாளரும்
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
ஆகியவற்றின் அங்கத்தவருமாகிய
கு.குணதாஸ் அவர்களின் அன்புத்தந்தை

### முருகேசு குணரத்தினம்

அவர்கள் 24.10.2007 புதன்கிழமை காலமாகி விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி ப.நெ.வ.அ.கூ.சங்கம்,
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

பணியாளர் நலன்புரி சங்கம்,
கூ.ஊழியர்.தொ.சங்கம்.

(சி/54135)

## பிறந்த நாள் விழா அழைப்பு

H A P P Y



ஆ.நாகரத்தினம்
27.10.2007



நா.புஸ்பகுமாரி
04.09.2007

B I R T H D A Y

இன்று (27.10.2007) சனிக்கிழமை எங்களது பிறந்த நாளை கொண்டாட இருப்பதால் உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து, பிறந்த நாள் விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

யாழ் பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
**ஆ.நாகரத்தினம்**
(Ground Boy)

**திரு. ஆ.நாகரத்தினம்**
**நா.புஸ்பகுமாரி,**
சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

## UDUVIL GIRLS' COLLEGE

### POST OF VICE - PRINCIPAL

Applications are invited for the Post of Vice - Principal, Uduvil Girls'College(UGC) from suitable candidates from the staff of Uduvil Girls' College. Prospective canidates may apply giving details of qualifications, experience etc. supported by photo copies of certificates and two letters of recommendation.

Applications need to be certified by the Principal, UGC.

Application need to be sent under Registered cover on or before 31 -10-2007 to reach The Secretary JDCSI, Diocese Office.Vaddukoddai.

Please mark "Application for the Post of Vice-Principal, UGC" on the Top of the left hand corner of the envelope.

**Rt. Rev.Dr. Daniel S.Thiagarajah,**
Bishop & Chairman, UGC Board.

(67321)

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச உப - தலைவருமான

### சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்

அவர்கள் அகாலமரணமடைந்த செய்தியினை கேள்வியுற்று அதிர்ச்சியடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,
சாவகச்சேரி.

**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**

(சி-54134)

## மரண அறிவித்தல்

### சின்னம்மா நடேசமூர்த்தி



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட சின்னம்மா நடேசமூர்த்தி நேற்று (26.10.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான குழந்தைவேலு - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நமசிவாயம்-சிவகங்கை தம்பதியரின் அன்பு மருமகளும், நடேசமூர்த்தியின் அன்பு மனைவியும் நடேசலிங்கம் (சுவிஸ்), நடனகோபால், நடனேஸ்வரி, நடனகுமாரி (ஜேர்மனி), நடனதேவி, நந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேந்திரராசா (ரவி), அறிவழகன் (ஜேர்மனி), திருச்செல்வம், முரளீஸ்வரபவன், நகுலேஸ்வரி, பரிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகாந் (ஆசிரியர்), கவிச்செல்வி, சிந்துஜன், நதியா, காந்தீபன், நதீப், சுமன், நதுசா, அபிநயா, நிலுஜா, நிஷாந் (சுவிஸ்), அஜிதன், தர்சன், கிஷோதரன் (ஜேர்மனி), திலக்ஷன், அக்ஷயன், சாரங்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, மார்க்கண்டு, இராமநாதபிள்ளை, நாகபூர்ணம்,நாகம்மா, மகோதரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நித்தியரெத்தினம், அருந்ததி, மாசிலாமணி, நடனசபாபதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2007) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(67326)

தகவல்:
கணவர்,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளின் உடல்களை புதைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு வழங்கவில்லை

## பி.பி.ஸியில் பதிவாளர் மறுப்பு

கொழும்பு,ஒக்.27

அநுராதபுரம் விமானத் தளத்தின் மீதான தாக்குதலின் போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் சடலங்களை புதைக்குமாறு அநுராதபுரம் நீதிமன்றம் உத்தரவு எதனையும் பிறப்பிக்கவில்லை என்று நேற்றுமுன்தினம் அந்த நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றின் பதிவாளர் சுஜீதா சித்திராங்கனி செனிவிரட்ண பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளவையாவன:-

உயிரிழந்த புலி உறுப்பினர்களின் பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் நீதிமன்றுக்கு வந்து அறிவித்து மேலதிக உத்தரவைப் பெறுமாறே நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் பொலிஸார் அப்படிச் செய்யவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்ற உத்தரவு இல்லாமலேயே அவர்கள் சடலங்களைப் புதைத்துவிட்டனர்.

இதேவேளை அநுராதபுரம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகவே தாங்கள் புலிகளின் சடலங்களை அவர்களிடம் ஒப்படைக்காமல் புதைத்துவிட்டனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(சி)

# பயங்கரவாதிகள் அனைவரும் ஒரேமாதிரியானவர்கள் அல்லர்

## அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் கிலாரி கிளின்ரன் கூறுகிறார்



வாஷிங்ரன்,ஒக்.27

உலக ஒழுங்கில் பயங்கரவாதிகள் எனப்படுவோர் அனைவரும் ஒரே மாதிரியனவர்கள் அல்ல என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனின் துணைவியாரும் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான கிலாரி கிளின்ரன் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் 'கார்டியன் நியூஸ்' ஊடகத்துக்கு அவர் வழங்கிய நேர்காணலில் கூறியுள்ளதாவது-

அனைத்து பயங்கரவாதிகளையும் ஒன்றாகக் கருத முடியாது. அவர்களின் நோக்கம் பயங்கரவாதிகளாகக் காட்டப்படுவதன் பின்புலம் ஆகியவற்றை குறித்த தெளிவுபடுத்தலை நாம் பெற்றிருக்க வேண்டும். அதாவது இலங்கையில் போராடும் தமிழ்ப்புலிகள் அல்லது ஸ்பெய்னின் பாஸ்கியூ பிரிவினைவாதிகள் அல்லது அல் அன்பர் மாகாண கிளர்ச்சியாளர்கள் ஆகியோர் உத்திகளால் மட்டுமேதான் இணைந்துள்ளனர். தத்துவார்த்தங்கள் உள்ளிட்டவை அவர்களால் பகிர்ந்துகொள்ள முடியாது. அகன்ற தூரிகையால் நாம்தான் அவர்கள் மீது அத்தகைய சாயம் பூசுகிற தவறுகளைச் செய்வதாக நினைக்கிறேன்.

வரலாறு முழுமைக்கும் தத்துவார்த்த ரீதியான அல்லது பிரதேச ரீதியாக ஒன்றை எட்டுவதற்காக பயங்கரவாதம் என்பது ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டே வந்துள்ளது - என்றார் அவர்.

(1)

# அமெரிக்க 'கிறீன் கார்ட்' விண்ணப்பம்; அவதானம் தேவை என்று அறிவுறுத்து

கொழும்பு,ஒக்.27

அமெரிக்காவில் வதிவிட அனுமதி பெறுவதற்கான ''கிறீன் கார்ட்டை'' பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று அமெரிக்கா இலங்கையர்களைக் கோரியுள்ளது.

அமெரிக்காவில் வதிவிட அனுமதி பெறுவதற்கு ''கிறீன் கார்ட்டுகளை'' பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் இலவசமாகக் கிடைக்கின்றன.

இந்நிலையில் சிலர் இணையத்தளங்களில் இருந்து பெறும் விண்ணப்பப்படிவங்களை வெளியிட்டுவருவதாக அமெரிக்க அரசுக்குத் தெரியவந்துள்ளது. அதனால் அத்தகைய சட்டபூர்வமற்ற விண்ணப்பங்களில் எவரும் கவனம் செலுத்த வேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கிறீன் அட்டை மூலம் அமெரிக்க வதிவிட அனுமதிக்காகத் தெரிவு செய் யப்பட்ட 50 ஆயிரம் பேரில் 312 இலங்கையர் களும் அடங்குவர்.

1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிறீன் அட்டை மூலம் பல லட்சம் பேர் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றனர். (அ-203)

# வாசகர் திருமுகம்

## விசேட அடையாள அட்டை பெறுதல்

'உதயன்' செய்திக்கமைய பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக அறிவுறுத்தல்படி எமக்கு படைத்தரப்போ, கிராமசேவையாளரோ இதுவரை விசேட அடையாள அட்டைப் படிவங்களை வழங்கவில்லை.

சில கடைகளில் விசேட அடையாள அட்டை போட்டோப் பிரதிகள் 10 ரூபா வீதம் விற்கப்பட்டதனால் மக்கள் அவற்றை வாங்கி, பூர்த்தி செய்து புகைப்படங்களை ஒட்டி குடும்ப புகைப்பட விவரப் படிவம், விசேட அடையாள அட்டை விண்ணப்ப படிவம் என்பவற்றை போட்டோ பிரதி எடுத்து, கிராம சேவையாளரிடம் இவற்றை கையளித்தால் அவர் கையொப்பமிட ஒரு கிழமைக்கு மேல் செல்லும். அவர் பொதுமக்களை மேற்படி படிவங்ளை இராணுவ முகாமில் கையளிக்கும் படி கையெழுத்து இட்டுக் கொடுப்பார். இதுதான் இங்கு நடைமுறை.

புகைப்படம் எடுக்க 60/- ரூபா, படிவம் 20/- ரூபா, போட்டோப்பிரதி எடுக்க 30/- ரூபா, பைல்கவர் 10/- ரூபா. தனி ஆள் ஒருவருக்கு மொத்தம் 120/- செலவு ஆகிறது.

நான் 85 வயது நோயாளி. தனி ஆள். என்போன்றவருக்கு யார் உதவி? கடந்த 12ஆம் திகதி கிராம சேவையாளரிடம் படிவங்களை ஒப்படைத்தேன். மூன்று நான்கு முறை அங்கு சென்றேன். எனது கோப்புக்கு கையொப்பம் இடும் முறை இதுவரை வரவில்லை.

பொதுமக்களுக்கு படைத்தரப்பு விசேட அடையாள அட்டைப் படிவம் வழங்கவில்லை. கிராம மக்கள் எல்லோரும் உரிய படை அலுவலகம் சென்று தனித்தனியாக படிவங்களை வழங்குவதை தவிர்த்து படைத்தரப்பு கிராமசேவையாளரிடம் முழுமையாக படிவங்களை பெற்றுக் கொண்டால் பொதுமக்களுக்கு உதவியாக இருக்கும்.

மானிப்பாய். சி.அரசரத்தினம்.

## தமிழ் ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடு என்ன?

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் பெரும்பாலான ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டது இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம். ஆனால் அச்சங்கம் ஆசிரியர் சார்பான எதுவித நடவடிக்கையிலும் ஈடுபடாது ஆசிரியர் உரிமைக்கெதிராகவே யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது. யாழ். குடாநாட்டில் மீண்டும் போர் ஏற்பட்டபின் ஓர் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் வன்முறையில் பலியாகி உள்ளனர். அவர்கள் தொடர்பாக எதுவித கண்டனங்களையோ, அனுதாபங்களையோ தெரிவிக்கவில்லை. அதேநேரம் யாழ். வலயத்தில் கடமையாற்றிய ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளர் கைது செய்யப்பட்டபோது அது தொடர்பாக எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. அதே நேரம் ஏனைய ஆசிரியர்கள் சங்கங்கள் ஆசிரியர் சம்பள் முரண்பாடு தொடர்பாக 13.09.2007 இல் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொண்டபோது பொதுச் செயலாளர், நிர்வாகச் செயலாளர் ஆகியோர் ஒன்றுக்கொன்று முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் மாணவர் கல்வி பாதிப்படைய அனுமதிக்க முடியாது என்பது ஆகும். ஆனால் 2006ஆம் ஆண்டு ஒரு தவணைக்கு மேற்பட்ட காலம் மணாவர்கள் பணிப்புறக்கணிப்பு மேற்கொண்ட போது அதற்கு தார்மீக ஆதரவை வழங்கினர். அதேநேரம் யாழ்ப்பாணத்தில் நான்கு மாணவர்கள் கடத்தப்பட்டதன் பின் அவர்களை விடுவிக்கவேண்டுமென அறிக்கை வெளியிட்டனர். அது தவறு இல்லை. ஆனால் தொழிற்சங்கம் தொழிலாளர் நலனை மையமாகக் கொண்டே செயற்படவேண்டும். அதற்கு அடுத்தபடியே ஏனைய நடவடிக்கைகள். எனவே ஆசிரியர் சங்கங்கள் எதிர்வரும் 29.10.2007, 30.10.2007 ஆகிய நாள்களில் மேற்கொள்ளும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம். - ஆசிரியர் நலன்விரும்பி.

# சிறப்புப் பயிற்சி பெற்ற புலிகள் கிழக்குப் பகுதிகளில் ஊடுருவல்

## 'லக்பிம' வார ஏட்டில் தகவல்

''சிறப்புப் பயிற்சிகளைப் பெற்ற கொமாண்டோ அணியினரை கிழக்கில் தமி ழீழ விடுதலைப் புலிகள் தரையிறக்கியுள்ள னர்''

- இவ்வாறு ''லக்பிம'' வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

''லக்பிம'' வார ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகள் தெற்கின் ஆழமான பகுதிகளில் தாக்கியிருக்கின்றனர். யால தேசிய வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள இராணுவ முகாமை அவர்கள் தாக்கியுள்ளனர். விடுதலைப் புலிகளின் முன்னைய தாக்குதல்களுடன் ஒப்பிடும் போது இது சிறியதாக இருந்தாலும் அதன் நோக்கம் இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியது. மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டு வரும் வன்னிப் பகுதியில் இருந்து அவர்களின் வளங்களை திசை திருப்புவதும், அங்கிருந்து இராணுவத் திட்டமிடல் அதிகாரிகளின் கவனத்தை திருப்புவதும்தான் இந்தத் தாக்குதலின் நோக்கமாகும்.

எனினும், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தாக்குதல் வன்னியில் நடைபெறும் படை நடவடிக்கைகளில் குறைந்தளவு தாக்கத்தை ஏற்படுத்திய போதும், அது விடுதலைப் புலிகளினது திறனைக் காட்டுகின்றது.

கிழக்கைப் படையினர் கைப்பற்றிய போதும் விடுதலைப் புலிகள் அங்கிருந்து செயற்படுவதனை அவர்களால் தடுக்க முடியவில்லை. கடந்த திங்கட்கிழமை 9 இராணுவத்தினர் தங்கியிருந்த முகாமை தாக்கியது அதற்கு உதாரணமாகும்.

எதிர்காலத்தில் கிழக்கிலும் தென் மாகாணங்களிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக முக்கியதிருப்பத்தை இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் மரபு வழித் தாக்குதல் வல்லமைகள் இல்லாது போனாலும் கெரில்லாத் தாக்குதல்களுக்குரிய வல்லமைகளை அவர்கள் கொண்டுள்ளனர்.

### யாலத் தாக்குதல்

கிழக்கிலும், அதனை அண்டிய தென்னிலங்கைக் காடுகளிலும் கெரில்லா நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு சிறிய அளவிலான போராளிகளே தேவை. சிறப்புப் பயிற்சிகளைப் பெற்ற 15 உறுப்பினர்களைக் கொண்ட விடுதலைப் புலிகளே கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தாக்குதலை நடத்தியுள்ளனர் என நம்பப்படு கின்றது.

தாக்குதலுக்கு உட்படும் இராணுவத்தினருக்கு உதவியாக விரையும் படையினரின் நுழைவுப் பாதையிலும் அவர்கள் கண்ணிவெடியைப் புதைத்துவிட்டுச் சென்றுள்ளனர். கொல்லப்பட்ட படையினரை ஏற்றிவரச் சென்ற படையினரின் உழவு இயந்திரம் ஒன்று இந்த அமுக்க வெடியில் சிக்கியது. இதன்போது படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலானது மிகவும் சிறந்த பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகவும் சிறப்புப் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளின் அணி ஒன்றே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையைக் கருதும்போது அவர்கள் அங்கு சிறப்புப் பயிற்சி பெற்ற உறுப்பினர்களை நடவடிக்கையில் ஈடுபடுத்தி வருவது தெளிவானது.

கிழக்கு காடுகளில் அதிகளவான உறுப்பினர்களை வைத்திருப்பது விடுதலைப் புலிகளின் தலைமைக்கு நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்தலாம். எனவே 8-12 உறுப்பினர்களைக் கொண்ட மிகவும் சிறப்புப் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகள் தேவையான நடவடிக்கைகளுக்காக அங்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

சிறப்புப் பயிற்சி பெற்ற 12 - 15 விடுதலைப் புலிகள் கிழக்கில் இயங்கி வருகின்றனர் எனப் புலனாய்வுத் தகவல்கள் முன்னர் தெரிவித்திருந்தன.

### சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள்

கடந்த மாதம் இறால்குழி கிராமத்தின் மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதலை நடத்தியிருந்ததுடன் மற்றுமொரு சம்பவத்தில் இராணுவத்தினரின் சுற்றுக்காவல் அணியினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

பேராறுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளை முல்லைத்தீவுக்கு கொண்டு செல்வதற்கு விடுதலைப் புலிகள் முயற்சித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே கடந்த செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி புல்மோட்டை கடலில் நடைபெற்ற மோதல்கள் விடுதலைப் புலிகளை பேராறில் இருந்து முல்லைத்தீவுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை என சில படைத்துறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் அது சிறப்புப் பயிற்சிபெற்ற விடுதலைப் புலிகளை கிழக்கிற்கு நகர்த்தும் நடவடிக்கையாகும்.

பலநூறு விடுதலைப் புலிகள் பேராறு மற்றும் கஞ்சிகுடிச்சாற்றுக் காடுகளில் தங்கியுள்ளனர் என நம்பப்படுகின்றது. கடந்த பல வாரங்களில் சிறப்பு அதிரடிப் படையினர் கஞ்சிகுடிச்சாறு காடுகளில் விடுதலைப் புலிகளுடன் மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். யால பகுதியில் அமைந்திருந்த படை நிலை மீதான தாக்குதல் கிழக்கில் நடைபெறும் பல கெரில்லாத் தாக்கு[illegible]மோர் தாக்குதல்கள் என்ப[illegible]க்கி அதிக துருப்புகளை [illegible]ம் உத்திகளாகும்.- என்று அ[illegible]கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண CAR வாடகைக்கு



* திருமண வைபவங்களுக்கான A/C கார்கள் (ஆங்கில இல), டொல்பின் வான் மற்றும் மினிபஸ் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
* சுற்றுலா, விசேட வைபவங்களுக்கு A/C கார் விசேட கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு : ரட்ணம்,
22, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(இலங்கைச் செந்திருவைச் சங்கத்திற்கும் சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்திற்கும் இடையில்).
T.P.: 0777- 903090, 0777- 246117 (67059)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler, கல்பேட் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை).
நல்லூர் பாம்,
19,முருகேசர் லேன்,
நல்லூர்.
(67256)

## மீண்டும் விடுதலைப் பெருவிழா

இடம்: ஆவரங்கால் சந்தி
காலம்: ஐப்பசி 26, 27, 28ஆம் திகதிகளில்
நேரம்: தினமும் பிற்பகல் 3 மணிக்கு

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி, பிசாசின் பிடி, பில்லி சூனியக் கட்டுக்கள்,
பரம்பரைச் சாபங்கள் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்.

குறிப்பு: 27ஆம், 28ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) அன்பான இயேசு ஜீவ கீதங்கள் பாடிய சுவிசேஷகரும் பாடகருமான சகோ. N.பத்மதேவா அவர்களின் ஜீவ கீத நிகழ்வும் இடம்பெறும்.

* கடந்த மாதங்களில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாவில் அனேக மக்கள் அற்புத விடுதலையடைந்தார்கள்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, அச்சுவேலி.
T.P.: 021 222 6730
(67312)

# மக்கள் வங்கி

## விசேட அறிவித்தல்

தன்னியக்க டெலர் இயந்திர சேவையில் அவசர திருத்த வேலைகள் இடம்பெறவிருப்பதன் காரணமாக, மக்கள் வங்கியின் PET ATM இயந்திரம் 2007.10.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 1.30 தொடக்கம் அதிகாலை 5.30 வரை செயற்படமாட்டாது என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

பிரதி பொது முகாமையாளர் (கிளைகள்)
மக்கள் வங்கி

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


## Calling for Tender Teaching Hospital, Jaffna.


### Extension & Renovation to Emergency Unit, G.H., Jaffna.

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed Tender for Extension & Renovation to Emergency Unit G.H., Jaffna, up to 10.00 a.m. on 09/11/2007. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 02.11.2007 on payment of non refundable deposit of Rs: 2000/=.
2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.
3. Tender Forms are issued only to contractors having valid registration in grade-M7- and above in the Field of building constructions and other institute of construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction of contractors association of Sri Lanka.. (NCCASL).
4. Sealed Tenders may be dispatched either by registered post or hand delivered to Director Teaching Hospital, Jaffna or deposited in the Tender box at Teaching Hospital Jaffna on or before 10 a.m. on 09/11/2007.
5. Tender document may be inspected free of charge at the Resident Engineer's Office CECBTH, Jaffna.
6. For further details please contact Hospital Secretary TH, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**
(C/54126)

# மரண அறிவித்தல்

## செல்லையா செல்வரட்ணம்



**(இளைப்பாறிய MSO (தபால் தரம் பிரிப்பாளர்), தபாலகம், கிளிநொச்சி)**

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, கண்டி வீதி, மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்டு யாழ்ப்பாணம், வேம்படி வீதியில் வசித்து வந்தவருமாகிய செல்லையா செல்வரட்ணம் 22.10.2007 அன்று காலமானார்.

அன்னார் செல்லையா - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் பத்மலோமை - றோசம்மா தம்பதியரின் மருமகனும் மேரி மாகிறெற்றின் பாசமிகு கணவரும் சகாயராணி (புனித நீக்கிலார் முன்பள்ளி ஆசிரியை, மிருசுவில்), ஜெனந்தரத்தினம் (GTZ), ஜெபரட்ணம் (M.P.C.S கிளிநொச்சி), விஜயராணி (கொழும்பு), விநோதரத்தினம் (கச்சேரி-கிளிநொச்சி), ஜெசிராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். யேசுதாசன் (தபாலகம், வயாவிளான்), அஞ்சலா, கத்தரீன், எல்மோ (மேல்மாகாண ஆளுநர் காரியாலயம், கொழும்பு) விந்தினி, வோல்ரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் மேரி சவுந்தா, ஞானராசா (பிரான்ஸ்), அடைக்கலநாயகி, தேவதாசன் (ஓய்வூதியர், தபாலகம் கிளிநொச்சி) செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான விக்டோறியா, அருட்சகோதரி மேரி பற்றீசியா (தி.கு), யோசேப் (முன்னாள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டொறிஷியன், ஜெனுசன், ஜென்சியா, மரீன் வேஜிகா, ஜெலோஜன், கரிஷன், எமிஷா, கர்ஷிகன், திஷாஜினி, நிவோல்ரா, டிறோஜனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இன்று (27.10.2007) சனிக்கிழமை காலை 9 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி: [illegible] லிக முகவரி:-
கண்டி வீதி, [illegible] 7 வேம்படி வீதி,
மிருசுவில். (673[illegible] [illegible]ணம்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P.: 0777 111372, 077 3597505

# மரண அறிவித்தல்

## திருமதி வல்லிபுரம் சிவக்கொழுந்து (லட்சுமி)



துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலையின் நீண்டகால வாசியும் தற்காலம் லண்டனில் வசித்தவருமான திருமதி வே.க.வல்லிபுரம் சிவக்கொழுந்து 23.10.2007 லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமர் சின்னத்தம்பி - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை - சௌந்தரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வே.க.வல்லிபுரத்தின் (முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர், வல்லிபுர ஆலய நிர்வாகி) அவர்களின் அன்பு மனைவியும் கமலேஸ்வரன் (Co-op FED. SRILANKA, Director - ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர்- Managing Director - Ragan Group of Companies), காலஞ்சென்ற கமலேஸ்வரி, பாக்கியலட்சுமி (வவுனியா), சிவானந்த விக்னேஸ்வரன் (இலங்கை வங்கி, நெல்லியடி), கிருஷ்ணராசா (ஓ/கிராமசேவையாளர், வவுனியா), இராஜேஸ்வரி (லண்டன்), நடராசா (லண்டன்) சிவசோதிராசா (லண்டன்), அற்புதராசா (லண்டன்), நகுலேஸ்வரி (கொழும்பு), அருள்வரதராசா (லண்டன்), தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, செல்லம்மா, சுப்பிரமணியம், ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி (ஓ/ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற விசுவலிங்கம் - இராசலிங்கம், சுகு மாரன் (பொலிஸ் பரிசோதகர், வவுனியா), சரோஜினிதேவி (துன்னாலை), செல்வலட்சுமி (Telecom, வவுனியா), விக்னேஸ்வரன் (லண்டன்), சாந்தினி (துன்னாலை), வனஜா (லண்டன்), ஜானகி (லண்டன்), மனோகரன் (Post Office, Colombo-6), புவிதா (லண்டன்), வசீகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் காண்டீபன் (Engineer, R.B.S London), வாசுகி ( ACCA கொழும்பு), Dr.பகீரதி (மணிப்பால்), பார்த்தீபன் (Student, லண்டன்), பிரதீபன் (வர்த்தகர் - லண்டன்), குருபரன் (வவுனியா), சுலோஜனா (யாழ். பல்கலைக்கழகம்), தர்சினி (கொழும்பு), ஜெயவர்மன் (Aerospace Engineering Student), ஜெயப்பிரகாஷ் (கொழும்பு), ஜெயரமணன் (Hartley College), சயந்தன் (வவுனியா மகா வித்தியாலயம்), நிரோ ஷன் (வவுனியா), துஷ்யந்தி (Convent Vavuniya), கஜந்தன் (வவுனியா), சஞ்ஜீவன் (லண் டன்), தயாளன் (லண்டன்), சர்மினி (லண்டன்), நிருஜன் (லண்டன்), கௌசல்யன் (லண் டன்), நிருஜா (லண்டன்), காயத்திரி (லண்டன்), அஜன் (லண்டன்), பிருந்தா (சைவ மங்கையர் கழகம்), தர்ஷன் (இந்துக் கல்லூரி, கொழும்பு), அருட்சுதா (லண்டன்), வாகீசன் (லண் டன்), டினேசன் (லண்டன்), ஜதீசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் Eng.முகுந்தன் (கொழும்பு), கோகிலா (ACMA லண்டன்), Eng.ரஜீவ் (ROME University), டைசாயினிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பாட்டியும் லக்ஷாயினி (லண்டன்), தாட்சாயினி (லண்டன்), சங்கவி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் 28.10.2007 முற்பகல் 11.30 மணியளவில் HENDON CRE MATORIUM, HENDON, UK இல் நடைபெறும். 28.10.2007 மு.ப.10 மணி முதல் 11.30 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை வல்லியானந்தம் வீதி, துன்னாலையில் நடைபெறும். கொழும்பில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மு.ப.10 மணி முதல் 11.30 மணிவரை 54, விவேகானந்த வீதி, கொழும்பு - 6, வெள்ளவத்தையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| கொழும்பு தொடர்பு: | க.வ.கமலேஸ்வரன் | - 2360905, 2581696 |
| லண்டன் தொடர்பு: | வ.சிவசோதிராசா | - 2082048989 |
| துன்னாலை தொடர்பு: | V.S.விக்னேஸ்வரன் | - 0212263645 |
| வவுனியா தொடர்பு: | கிருஷ்ணராசா | - 024 2222708 |

தகவல்: க.வ.கமலேஸ்வரன்,
54, விவேகனானந்த வீதி, கொழும்பு - 6.

(சி/54125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர்களின் சேவை மதிக்கப்படுவதற்கு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஒன்றிணைவோம்

## ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக அழைப்பு

கொழும்பு,ஒக்.27

ஆசிரியர், அதிபர் சேவைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் அவமதிப்புக்கும் எதிராக இம்மாதம் 29,30 ஆம் திகதிகளில் நடத்தப்படும் அதிபர், ஆசிரியர் வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிபெற அனைவரும் ஒன்றிணைவோம்.

இவ்வாறு இலங்கையில் உள்ள ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை தரம் I அதிபர் சேவைச் சங்கம், சுதந்திரக் கல்விச் சேவைச் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், தேசிய கல்விச் சேவைகள் சங்கம், பெருந்தோட்ட ஆசிரியர் சங்கம், அரச சேவை ஐக்கிய ஆசிரியர் சங்கம், சுயாதீன இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஜாதிக ஆசிரியர் சங்கம், கல்வி தொழிற்சார் ஊழியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை மனையியல் விவசாய டிப்ளோமா ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளன. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

"ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கும்பொருட்டு கல்வி அமைச்சினால் சம்பள ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலப் பிரேரணைகளை நடைமுறைக்குக் கொண்டுவரச் செய்வதே எமது கோரிக்கையாகும்

சம்பள அதிகரிப்பு

| | |
|---|---|
| தரம் 1 | ரூபா 4170 |
| தரம் 2 I | ரூபா 5035 |
| தரம் 2 II | ரூபா 4810 |
| தரம் 3 I | ரூபா 3320 |
| தரம் 3 II | ரூபா 1950 |

* இதன் மூலம் 1997.01.01 முதல் அந்தஸ்து குறைக்கப்பட்டு அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஆசிரியர், அதிபர் சேவைகளின் தரத்தை உயர்த்துதல்.

* இந்த கோரிக்கைகளை முன்வைத்தே 2007.07.16இல் தொழிற்சங்க நடவடிக்கையும், 2007.09.13இல் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தமும் ஆசிரியர் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டன.

* இருப்பினும் எமது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குத் தகுந்த பதிலளிக்க மறுக்கும் அரசு அதனை நசுக்கவும் முயற்சிக்கின்றது. அரசின் இந்த முயற்சிகளை முறியடித்து எமது கோரிக்கைகளை வெற்றிகொள்ள எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வோம்.

### போராட்டத்தின் வரலாறு

1995,1996 காலப்பகுதிகளில் அன்றைய அரசால் வைத்தியம், பொறியியல் துறையினருக்கு நிகரான வாண்மைமிகு சேவைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வேதனங்களும் நிர்ணயிக்கப்பட்டன. அதே அரசு பீ.சி. பெரேரா சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகள் மூலம் 1997.01.01 இல் அதிபர், ஆசிரியர் சேவைகளைத் தொடர்ந்தும் ஏற்றுக் கொண்டபோதும் நிர்ணயிக்கப்பட்ட வேதன முறையை நீக்கியது. 1997.01.01 முதல் அனைத்து அரச சேவையினருக்கும் மாத்திரம் வேதனம் 60 வீதத்தால் உயர்த்தப்பட்டபோதும் ஆசிரியர், அதிபர் சேவைகளுக்கு மாத்திரம் வேதன அதிகரிப்பு பற்றி பின்னர் அறிவிப்பதாக அரச நிருவாக சேவையின் 2/97/11 இலக்கச் சுற்றுநிருபம் மூலம் தெரிவிக்கப்பட்டது. 9 ஆண்டுகள் கடந்தபின்னும் இவ்விரு சேவையினருக்கும் இந்த 60 வீத வேதன அதிகரிப்பு வழங்கப்படவில்லை.

### ஆசிரியர், அதிபர்களின் சேவைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியும் அவமதிப்பும்

பீ.சி.பெரேரா சம்பள ஆணைக்குழு மூலம் உருவாக்கப்பட்ட சம்பள முரண்பாடு, கூட்டமைப்பு அரசின் சாலிய மத்தியு, லயனல் பர்னாந்து சம்பள ஆணைக் குழுக்களால் நீக்கப்படுவதற்குப் பதிலாக ஆசிரியர், அதிபர் சேவைகளின் அந்தஸ்த்தும் தாழ்மட்ட அரச சேவையாளர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த அநீதிக்கு எதிராக ஆசிரியர், அதிபர் சங்கங்கள் தனித்தும் கூட்டாகவும், நடத்திய தொழிற்சங்க போராட்டங்களின் பலனாக தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் சம்பள ஆணைக் குழுவினரால் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது பீ.சி.பெரேரா சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நியாயப்படுத்தும் வகையிலேயே சாலிய மத்தியு, லயனல் பர்னாந்து ஆணைக்குழுக்களால் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. அவர்களது தாக்கங்கள் தொழிற்சங்க பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட வாதங்களால் முறியடிக்கப்பட்டன.

### இடைக்கால சம்பளப் பிரேரணை

எங்களது தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கோரிக்கையின் பேரில் ஆசிரியர், அதிபர் சேவைகளை ஏனைய வாண்மைத் தொழில்களுக்கு இணையான சேவையாக ஏற்றுக் கொள்வதாக ஆணைக்குழுவால் எமது சங்கங்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்ததும் இதனை நடைமுறைப்படுத்துவதாகவும் கூறப்பட்டது.

தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரியதற்கிணங்க, கல்வியமைச்சு இடைக்கால சம்பள பிரேரணையை முன்வைத்தது. இருப்பினும் இன்றுவரை பல தொழிற்சங்க நடவடிக்கைகளை தொழிற்சங்கங்கள் மேற்கொண்டபோதும் அரசின் மௌனம் கலையாமையால் எதிர்வரும் 29ஆம்,30ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தின் மூலம் எமது போராட்டத்தை வெற்றிபெறச் செய்வோம் - என்றுள்ளது. (அ-50)

# பருத்தித்துறை பொதுநூலகம் நகரசபையால் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27

பருத்தித்துறை நகரசபை பொது நூலகம் வாசகர்களின் வசதிகருதி பருத்தித் துறை நகரசபையால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வடகிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியில் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவில் நீர்த்தாங்கியொன்றும் 6 லட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவில் பொது மல கூட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் இந்த நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நூலகத்திற்கு நூல்கள் கொள்வனவு செய்வதற்கென 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் உள்ளூராட்சி மன்ற ஆலோசனைக்குழு வாசகர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் இந்நூலகத்தைப் புனரமைப்பு செய்யுமாறு நகரசபையிடம் கேட்டிருந்ததையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (203-218)

# கோவிலாக்கண்டி மக்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன்

யாழ்ப்பாணம்,ஒக்.27

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி கிராம மகளிருக்கு சுயதொழில் முயற்சிக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

சேவாலங்கா நிறுவனத்தினர் அப்பகுதி மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக முதல் கட்டமாக 30 பயனாளிகளுக்கு கடன் வழங்கவுள்ளதாகவும் மேலும் சுழற்சிமுறையில் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கிடுகு பின்னுதல், கடற்றொழில், வீட்டுத் தோட்டம், வியாபாரம் ஆகிய சுயதொழில் முயற்சிக்கு கடன்கள் வழங்கப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது (203-207)

# ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கம் பங்குபற்றாது

## அறிக்கை மூலம் விளக்கம்

திருகோணமலை,ஒக்.27

ஐந்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடத்தவுள்ள தொழிற்சங்கப் போராட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கம் பங்குபற்ற மாட்டாது.

சங்கத்தின் தலைவர் நா.இராஜநாதன், செயலாளர் த.மகாசிவம், நிதிச் செயலாளர் எஸ்.தர்மராசன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனநாயக ரீதியில் செயற்படும் ஒரு தொழிற்சங்கம் ஆகும். எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் யாழ்ப்பாண மாவட்டம், வன்னி மாவட்டம் உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலும் கடமைபுரிகின்றனர். நாட்டில் நிலவும் போர்ச்சூழலினால் சகல மாவட்டங்களிலுமுள்ள நிர்வாகிகளையும் ஒன்று கூட்டி போராட்டம் தொடர்பான தீர்மானத்தை எடுக்கமுடியாத சூழ்நிலையில் உள்ளோம். நாட்டின் இன்றைய சூழல் தமிழர்களாகிய நாம் கூட்டங்களை கூட்டவோ அல்லது போராட்டங்களை முன்னெடுக்கவோ முடியாத நிலை என்பது உலகறிந்த உண்மை.

சங்கத்தின் மேற்படி தீர்மானத்திற்கு மாறாக நிர்வாகிகளோ அல்லது அங்கத்தவர்களோ தொழிற்பட்டால் அதனால் வரும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்புக் கூறவேண்டும். சங்கம் அதற்குப் பாத்திரவாளியாக இருக்காது.

இப்போராட்டத்தை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்கள் எமது சங்கத்துடன் கலந்தாலோசிக்கவுமில்லை, போராட்டத்தில் கலந்துகொள்ளும்படி அழைக்கவுமில்லை.

இச்சங்கங்களின் சதிவலைக்குள் எமது அங்கத்துவம் சிக்கித் தவிப்பதை எமது சங்கத் தலைமை விரும்பவில்லை என்பதையும், எமது சங்கத்திற்கு அரசியல் பின்நோக்கம் எதுவுமில்லை என்பதையும் சகல நிர்வாகிகளுக்கும் அங்கத்தவர்களுக்கும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

சங்கத்தின் செயற்குழுவோ அல்லது ஆட்சி மன்றக் கூட்டமோ கூட்டி தொழிற்சங்கப் போராட்டம் நடத்த வேண்டும் என தீர்மானம் மேற்கொள்ளக் கூடிய சூழல் ஏற்படும் வரை போராட்டங்களில் சங்கம் ஈடுபட முடியாத நிலையில் உள்ளது என்பதைப் பகிரங்கமாகத் தெரியப்படுத்த விரும்புகின்றோம் - என்றுள்ளது. (அ-1)

# போதியளவு ஊழியர்கள் இன்றி இயங்கும் பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அலுவலகம்

கட்டைவேலி,ஒக்.27

பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகம் முகாமைத்துவ உதவியாளர், சிற்றூழியர்கள் எவரும் இன்றி கோட்டக் கல்வி அதிகாரியுடன் மட்டுமே இயங்கி வருகின்றது.

இந்தப் பணிமனையில் கடமை புரிந்து வந்த முகாமைத்துவ உதவியாளர் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார். சிற்றூழியர் பதவி உயர்வு பெற்று வேறொரு திணைக்களத்திற்குச் சென்றுவிட்டார்.

இவர்களின் இடங்களில் நிலவும் வெற்றிடங்கள் பல மாதங்கள் ஆகியும் நிரப்பப்படாத நிலையில் உள்ளன என்று கூறப்படுகிறது.

இதனால் பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கோட்டக் கல்வி அலுவலகத்திற்குச் செல்லும் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் உட்பட பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உரிய காலத்தில் தமது வேலைகளைப் பூர்த்தி செய்யமுடியாது திண்டாடுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

அத்துடன் கோட்டக் கல்வி அதிகாரி தனியே இருந்துகொண்டு நிர்வாக வேலைகளை முழுமையாக மேற்கொள்ளமுடியாது உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே விரைவில் இப்பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர். (203-160)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.27

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுநூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு எதிர்வரும் 31ஆம் திகதி மாணவர்களிடையே பொது அறிவு, கட்டுரை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்களை நாளைமறுதினம் 29ஆம் திகதிக்கு முன்னர் பெயர் விவரங்களை அனுப்பிவைக்குமாறு நூலகப் பொது நூலகர் கேட்டுள்ளார்.

பொதுஅறிவுப் போட்டி பிரிவு ஒன்று தரம் 5 தொடக்கம் தரம் 7 வரையான மாணவர்களுக்கும் பிரிவு இரண்டு தரம் 8 தரம் 9 மாணவர்களுக்கு பிரிவு மூன்று தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்க ளுக் குமாக நடத்தப்படவுள்ளன.

மாணவர்களின் கல்வியில் பொது நூலகங்களின் பங்களிப்பு என்னும் தலைப்பில் தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது. (203)



மறைந்த எழுத்தாளர் ஏ.ஜே.கனகரட்ணவின் நினைவு தினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் குழந்தை மா.சண்முகலிங்கம் அன்னாரது உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும் கலை [illegible] சொ.சிவபாலன்(சிற்பி), எஸ்.சட்டநாதன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

# Vacancy

SDC - Swiss Agency for Development and Cooperation, a government organization of the Swiss Ministry of Foreign Affairs, is looking for a candidate for the following position in the Field Office in Jaffna.

## PROGRAMME OFFICER

As member of a small team, he /she will be in charge of projects in the field of humanitarian assistance and rehabilitation carried out in collaboration with local partners, contribute to the design of new projects. Monitoring, evaluating and reporting will be part of duties.

The ideal candidate should have a Degree in development related subjects with minimum five years experience in similar position in an INGO/ NGO

**Other requirements**

* High level of fluency in both, written and oral, in English and Tamil
* Strong organisational skills, ability to interact effectively with international and national personnel
* Experience of producing narrative, financial reports and budget monitoring
* Excellent computer skills, including expertise in MS Word, Excell and Out look
* Excellent people interaction skills and demonstrated ability to support a team effectively
* Proven ability to produce results within deadlines
* Ability to work independently and as part of a team

Appointment will be one year contract, renewable
Attractive and negotiable salary with medical benefits awaits the right candidate.

Please submit your application with the motivation letter and expected salary within 10 days to:

**Swiss Agency for Development and Cooperation**
**521/11 Point Pedro Road,**
**Nallur, Jaffna.**

Only short listed persons will be contacted (67325)

# அரசாங்க பெறுகை அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல் - 2008

2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்திய சாலைகளுக்குப் பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்குவதற்கான பெறுகைகள் 2007.12.07ஆம திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப் பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக் கப்படும். பெறுகைப் பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றித ழும் **(Worth Report)** எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும் **(Bid Bond)** சமர்ப்பித்து பெறுகைப் பத்திரப் பணமாக ரூபா 250/=உம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிப்புடனான பெறுகைக் கட்டுப் பணமும் செலுத்தி 2007.12.06ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை இப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்கள் வருமாறு:

**அ) உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்**

| நிறுவனங்கள் | பெறுகைப் பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| ஆ.வை.பருத்தித்துறை | 3000/= | 260,000/= | 30000/= |
| மா.வை.வல்வெட்டித்துறை | 2000/= | 211,000/= | 20000/= |
| மா.வை. தெல்லிப்பழை | 2000/= | 257,000/= | 20000/= |
| மா.வை. நெடுந்தீவு | 2000/= | 63,000/= | 20000/= |
| மா.வை. ஊர்காவற்றுறை | 2000/= | 66,000/= | 20000/= |
| மா.வை. சாவகச்சேரி | 2000/= | 114,000/= | 20000/= |
| சு.கூறு. கோப்பாய் | 1500/= | 65,000/= | 15000/= |
| சு.கூறு. சங்கானை | 1500/= | 79,000/= | 15000/= |
| சு.கூறு. அச்சுவேலி | 1500/= | 78,000/= | 15000/= |

**ஆ) சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்**

| நிறுவனங்கள் | பெறுகைப் பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சு.கூறு. அனலைதீவு | 1500/= | 19,000/= | 15000/= |
| சு.கூறு. காரைநகர் | 1500/= | 30,000/= | 15000/= |
| சு.கூறு. நயினாதீவு | 1500/= | 42,000/= | 15000/= |
| கி.வை. வேலணை | 1500/= | 29,000/= | 15000/= |
| கி.வை. வட்டுக்கோட்டை | 1500/= | 34,000/= | 15000/= |
| கி.வை. மருதங்கேணி | 1500/= | 17,000/= | 15000/= |
| கி.வை. பண்டத்தரிப்பு | 1500/= | 30,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. கரவெட்டி | 1000/= | 14,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. வரணி | 1000/= | 21,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. மானிப்பாய் | 1000/= | 16,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. கோண்டாவில் | 1000/= | 17,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. கொடிகாமம் | 1000/= | 27,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. அளவெட்டி | 1000/= | 17,000/= | 15000/= |
| ம.ம.ம.ம. குருநகர் | 1000/= | 6,000/= | 15000/= |

சகல பெறுகைகளும் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டுப் பெறுகை விவரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் இடப் படல்வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்ட உறையில் வைத்து அனுப் பப்படவேண்டும். பெறுகைகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப் பேற்கமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விவரங்களை இப்பணி மனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும். பெறுகைகள் திறக்கப்படும்போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ளமுடியும்.

வைத்தியகலாநிதி **ஆ.கேதீஸ்வரன்,**
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/54130)

திரு.திருமதி கதிரவேல் தம்பதியரின் பேர்த்திகளின்

# பரத நாட்டிய அரங்கேற்றம்



அல்வாய் தெற்கை சொந்த முகவரியாகவும் தற்போது கொழும்பில் வசித்து வரும் **த.யோகலிங்கம் - கீதா** தம்பதியரின்

செல்வப்புதல்விகளும்

கலாசூரி **ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன்**

அவர்களின் மாணவிகளுமான

## சிந்தூரி, நிருதி

ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று **(27.10.2007)**சனிக்கிழமை கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல அல்வை அரசடி விநாயகர் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:-*
நாகேந்திரம் பெரியப்பா, பெரியம்மாமார்கள், மாமாமார்கள், அத்தைமார்கள், அக்காமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், தம்பிமார்கள்.

*91,ஆசீர்வாதப்பா வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*
(சி/54127)

# அன்பொளி கல்வி நிலையம் - சாவகச்சேரி

*தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி*

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007

## பரிசளிப்பு நிகழ்வு

*எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இன்று (27.10.2007) சனிக்கிழமை காலை 9மணிக்கு நடை பெறும் பரிசளிப்பு நிகழ்வில் பரிசில்களும் பாராட்டுக்களும் பெறும் மாணவர் களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

| மாணவர் பெயர் | புள்ளிகள் | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. துரைராஜா யதுர்சன் | 173 | 26. அமிர்தலிங்கம் அனிதா | 151 |
| 2. இராகவன் இராகவி | 170 | 27. சிறீஸ்கரன் சாருப்பிரியன் | 151 |
| 3. சிவபாலன் கிரிஷிகா | 169 | 28. இராசரத்தினம் சஞ்ஷித் | 150 |
| 4. பொன்னம்பலம் தனுஷிகா | 168 | 29. பாலசிங்கம் தாருசன் | 150 |
| 5. தர்மபாலன் தர்மிகா | 167 | 30. சுந்தரேஸ்வரன் ராகவன் | 150 |
| 6. உதயகுமாரன் தேனுகானி | 167 | 31. பாலசுந்தரம் சுயந்தன் | 150 |
| 7. நாகராஜா டினோஜா | 165 | 32. முத்துலிங்கம் மதுராந்தகி | 150 |
| 8. சிவயோகன் மதுஷா | 162 | 33. பரமேஸ்வரன் சுதர்ஷன் | 149 |
| 9. பாக்கியராஜா தாட்ஷாயினி | 161 | 34. தியாகராஜா மிதுஷா | 149 |
| 10. பேரின்பநாதன் தர்ஷன் | 160 | 35. தையல்பாகன் நிரூஜா | 147 |
| 11. மார்க்கண்டு சிவறதன் | 160 | 36. சந்திரசேகர் யோகீசன் | 146 |
| 12. மதியழகன் டிவானா | 160 | 37. குமாரசாமி சிந்தூரியா | 146 |
| 13. தில்லைநாதன் கிரிஜா | 159 | 38. குணனேஸ்வரன் மகிழினி | 145 |
| 14. பரம்பொருள் சாகித்தியன் | 159 | 39. இராகுலன் கௌசிகன் | 144 |
| 15. தர்மராசா சாருதன் | 156 | 40. ஜெயகாந்தன் அனோஜா | 142 |
| 16. இந்திரகுமார் ஜனுசிகா | 156 | 41. திருநாவுக்கரசு ஸோபியா | 142 |
| 17. ஞானசேகரம் வினோதன் | 155 | 42. தயாசீலன் அகல்யா | 142 |
| 18. சுந்தரலிங்கம் குகரதன் | 155 | 43. தவநேசன் புவிந்தன் | 142 |
| 19. நித்தியானந்தன் துவாகரன் | 155 | 44. விக்னகுமார் கோபிநாத் | 142 |
| 20. சபாரத்தினம் விதுஸ்லா | 155 | 45. மகேந்திரன் திலக்ஷன் | 141 |
| 21. கெங்காதரன் மதுரதன் | 154 | 46. சிங்கராசா நிதர்சனா | 141 |
| 22. சுரேஷ் ஜெனிதன் | 153 | 47. இரங்கநாதன் அகிம்சா | 141 |
| 23. இரத்தினசிங்கம் துசாந்தி | 153 | 48. கோபாலகிருஷ்ணன் டினா | 140 |
| 24. புஸ்பராசா யதூசன் | 152 | 49. இராசகுமார் நிதர்சிகா | 140 |
| 25. அன்பரசன் தேனுஜா | 152 | 50. சந்திரராசா ஜபோசன் | 140 |

(67324)

*இவர்களோடு வெட்டுப்புள்ளிகளுக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், கல்வி கற்ற ஏனைய மாணவர்களையும் கல்விப் பாதையில் தொடர்ந்தும் முயற்சியுடன் கல்வி கற்று வெற்றிகள் பெற்று நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**இயக்குநர், ஆசிரியர், உதவி ஆசிரியர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## உண்மை வெளிவருவதால் நிலைமை தெளிவாகும்

விடுதலைப் புலிகளின் கரும்புலி அணி கடந்த 22 ஆம் திகதி விடிகாலை அநுராதபுரம் விமானப்படைத்தளத்தினுள் நடத்திய வெற்றிகரமான ஊடுருவல் தாக்குதல் தொடர்பாகப் புலிகளின் வீரத்தையும், துணிச்சலையும், துல்லியமான கணக்கீட்டையும் புகழ்ந்து பேசி, புலிகளின் சாதனையைப் பெரிய விடயமாக்கி, இலங்கை அரசுக்கும் நாட்டுக்கும் அபகீர்த்தியையும், அவமானத்தையும் ஏற்படுத்தாதீர்கள் என்று அரச உயர்மட்டங்களில் இருந்து ஊடகங்களுக்கு அழுத்தங்கள் கடுமையாக வருகின்றமை வெளிப்படை. ஆனால் அவற்றைப் புறந்தள்ளி, உண்மை நிலையைத் தமது வசனங்கள், வாசகங்கள் இடையேயாவது செலுத்தி, துணிச்சலாகச் செயற்படும் சில ஊடகங்களைக் கொழும்பில் காண முடிகின்றது.

அநுராதபுரம் தாக்குதல் குறித்து கொழும்பு ஆங்கில நாளிதழ் 'டெய்லி மிரர்' நேற்று வெளியிட்ட கட்டுரை இந்த வகையில் கணிக்கக்கூடியது. ஊடகங்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் கடும் அழுத்தங்கள், நெருக்குவாரங்கள், இறுக்கங்களுக்கு மத்தியில் நிதர்சனத்தை மக்களுக்கு எடுத்துரைப்பதில் நேர்மையான முயற்சியாக இதைக் கணிக்க முடியும்.

"அண்மைக் காலத்தில் அரசு தனது பரப்புரைப்போரின் அங்கமாக சில சுலோகங்களை அழுத்தமாகப் பெருத்த எடுப்பில்பிரசாரம்செய்துவந்தது. 'கிழக்குமாகாணத்தைவிடுவித்தல்!', 'புலிகளின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியக் கப்பல்களை மூழ்கடித்தல்!', 'புலிகளை வன்னிக்குள் முடக்குதல்!', 'வடக்கு - கிழக்குக்கு வெளியே பயங்கரவாதத்தை வேரோடு ஒழித்தல்!' போன்ற அந்தப் பரப்புரைகளை, 21 கரும்புலிகளைக் கொண்ட ஓரணியும், இரட்டை இயந்திரங்களைக் கொண்ட இரண்டு இலகு ரக விமானங்களும் பொய்யாக்கி, ஓரிரவுக்குள் நிலை மையை முற்றாக மாற்றிவிட்டன." - என்ற பீடிகையோடு அக்கட்டுரை தொடங்குகின்றது.

"தமது மறைவிடத்துக்குள் இருந்து வெளிப்பட்ட கரும்புலிகள், இலங்கை விமானப்படையின் அதி உச்சப் பாதுகாப்புக்கு உட்பட்ட அநுராதபுரம் விமானப் படைத்தளத்துக்குள் ஊடுருவி பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

"நிபுணத்துவம் மிக்க படைத்தரப்பு ஒன்றுக்கு எதிராக 'கொமாண்டோ'ப் பாணியில் இத்தகைய தாக்குதலை, உலகிலேயே முதல் தடவையாக நடத்தியதன் மூலம், இலங்கை அரசை மிக இக்கட்டான நெருக்கடிச் சிக்கலுக்குள் மூழ்கடித்திருக்கின்றார்கள் புலிகள்" - என்றும் அக்கட்டுரை தெரிவிக்கின்றது.

அதேசமயம், சுயாதீன இராணுவ விமர்சகரும், இந்திய இராணுவத்தின் முன்னாள் ஆலோசகருமான பி. இராமன், இந்தத் தாக்குதல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் -

"நம்ப முடியாத அளவிலான மிக உச்சக்கட்ட உறுதிப்பாடும், துணிவும், துல்லியமும் நிறைந்த வெற்றிகரத் தாக்குதலையே விடுதலைப் புலிகளின் 21 கரும்புலிகளும் முன்னெடுத்திருக்கின்றனர்." - என்று கூறுகின்றார்.

ஆனால் -

புலிகளின் நேரடிப் பிரசன்னம் இல்லாத இடமான - புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத பிரதேசமான - சிலாவத்துறைப் பகுதியைக் கைப்பற்றிவிட்டு, அங்கிருந்து புலிகளைத் தாக்கி விரட்டியடித்து விட்டு, அப்பிரதேசத்தைப் புதிதாகக் கைப்பற்றிப் பெரும் சாதனை படைத்திருக்கின்றமை போன்று பெரிய வீர,தீர சாகஸ அறிவிப்புகளை விடுக்கும் அரசுத் தரப்பு, அநுராதபுர இழப்புகளை அமுக்கி வாசிக்கின்றது; மூடி மறைக்கப் பார்க்கின்றது. அரசுத்தரப்பிலிருந்து வெளிவரும் அறிவிப்புகள், அறிக்கைகள் போன்றவை அப்போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன.

ஆனாலும் அப்போக்குக்கு முரணாக - அரசுத் தரப்பின் அழுத்தங்களையும் மீறி - உண்மையை அம்பலப்படுத்தி, நிலைமையைச் சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு சில தென்னிலங்கை ஊடகங்கள் சிரத்தையோடு எடுக்கும் முயற்சி வரவேற்கத்தக்க அம்சமாகும்.

அமைச்சர் ஒருவரின் திருகுதாளத்தை அம்பலப்படுத்திய 'தவறுக்காக' - அடிப்படை ஆதாரமோ, ஆவண சாட்சியங்களோ இல்லாத நிலையிலும் கூட - அந்த அமைச்சரின் வெறும்வாய்மூல வாக்குமூலத்தை மட்டும் வைத்துக்கொண்டு - சம்பந்தப்பட்ட செய்தியாளரை இரகசியப் பொலிஸார் மூலம் வீடுதேடிச் சென்று கைதுசெய்யப் பண்ணி, விளக்கமறியலில் வைக்கும் அளவுக்கு நாட்டில் ஊடக சுதந்திரம் அல்லாடத் தொடங்கியிருக்கின்றது.

தவறான செய்தி ஒன்றை வெளியிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து வானொலி சேவைகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் திடீரென அரசுத் தரப்பால் இழுத்து மூடப்பட்டன. அவற்றுக்கான அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கைத் தீவில் ஊடகச் சுதந்திரமும் கருத்து வெளியிடும் உரிமையும் இவ்வாறு கடும் நெருக்குதலுக்குள் சிக்கியிருக்கையில், யுத்தம் தொடர்பாக - இராணுவ நடவடிக்கைகள், செயற்பாடுகள் சம்பந்தமாக - நியாயமான தேடல்கள், தகவல்களோடு - செய்திகளையும் புதினங்களையும் வெளியிடுவதில் நீதியுடனும், துணிச்சலுடனும் செயற்படும் ஊடகங்கள் சமூகத்தினால் விதந்து போற்றப்பட வேண்டும்; பாராட்டப்பட வேண்டும்.

# வன்னிக்குப் பசளை எடுத்துச்செல்ல வசதியாக சனியன்றும் ஓமந்தைச் சாவடி திறக்கப்படும்

கொழும்பு, ஒக். 27

ஏ-9 வீதியின் ஓமந்தை சோதனை நிலையம் இன்று தொடக்கம் வாரத்தில் ஆறுநாள்களும் திறக்கப்படும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது. இப்போது வாரத்தில் ஐந்து நாள்களில் சோதனை நிலையம் திறக்கப்பட்டு போக்குவரத்து இடம்பெறுகிறது.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வன்னிப் பகுதிக்கு பசளை வகைகளை எடுத்துச் செல்ல வசதியாக தனது பிரசன்னத்தை ஆறுநாள் களாக செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகரித்துள்ளதாக அதன் தலைமை அதிகாரி டோன் வண்டன்கோவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குமிடையிலான இச்சோதனை நிலையத்தை சனிக்கிழமைகளிலும் திறக்க கேட்டுக்கொண்டமை, பயிர்ச் செய்கைகாலத்தில் 3,500 தொன் எடைக்கு மேலான பசளை வகைகளை வன்னிப் பிரதேசத்துக்குள் எடுத்துச் செல்ல உதவியாக அமைகிறது. விவ சாயிகளுக்கு உதவும் முகமாக செஞ்சிலுவைக் குழு சோதனை நிலயத்தில் தனது பிரசன்னத்தை நீடித்துள்ளது. திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையான வழமையான போக்குவரத்துடன், அத்தியழவசியமான பசளை வகைகளை ஏற்றிச் செல்லும் நூற்றுக் கணக்கான பாரவூர்திகளை சோதனையிட்டு அனுப்பி வைக்கும் இருதரப்பினரின் பணிகளையும் இவ் மேலதிக நாள் இலகுவாக்குகிறது என்று வண் டன் கோவ் மேலும் தெரிவித்தார். சனிக் கிழமைகளில் பசளை வகைகளை ஏற்றிச் செல்லும் வாகன அணிகளை மாத்திரம் ஓமந்தையைக் கடக்க சம்பந்தப்பட்ட தரப்பினர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருதரப்பினரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க தனது பிரசன்னத்தை ஏற்கனவே ஐந்து நாள்களாக நீடித்ததன் மூலம் ஓமந்தைச் சோதனை நிலையத்தினூடாக மாதமொன்றுக்கு சராசரி 50,000 பொதுமக்களும் 7,000 வாகனங்களும் போக்குவரத்துச் செய்ய வசதியாக அமைந்தது - என்றுள்ளது.

## குடித்தொகை முதுகலைமாணி மாணவர்கள் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். பல்கலைக்கழக குடித்தொகை அபிவிருத்தி முதுகலை மாணி கற்கை நெறி முதலாவது தொகுதி மாணவர்களின் கற்கைநெறிப் பூர்த்தியை ஒட்டிய ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி கே. கந்தசாமி கலந்துகொள்வார். (202)

## அவசரம்: இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை இரத்தத்துக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. ஆர்வமுள்ளவர்கள் இரத்த தானம் வழங்க முன்வரவேண்டும்.

இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் இ. சிவசங்கர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரத்ததானம் செய்ய ஆர்வமுள்ளவர்கள் முடிந்தளவு விரைவாக இரத்த வங்கிக்கு நேரில் வருகைதந்து இரத்த தானம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். உறவினர், நண்பர்களையும் இரத்ததானம் செய்ய ஊக்கப்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறேன் - என்று அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கேட்டுள்ளார். (அ-1)

## காலையில் கடமைக்குச் சென்ற வேளை இளைஞர் பிறவுண் வீதியில் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். பிறவுண் வீதியில் - நாவலர் வீதியில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை 8.25 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த கனகராசா பிரதீபன் (வயது - 27) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

நகரில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் இவர் வழமைபோல் நேற்றுக்காலை சைக்கிளில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின்பின் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இதேவேளை -

பொம்மை வெளியில் வைத்து நேற்று முன்தினம் மாலை இளைஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ். இந்துக் கல்லூரி வீதியைச் சேர்ந்த பழனி செல்வராசா (வயது - 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

யாழ். பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு மரண விசாரணைகளை நடத்தினார்.

கொலையுண்ட நபர் மீது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெறுவதாகவும், அதன் பொருட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் வைத்து வருவதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை பிரேத பரிசோதனையின்பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## சடலத்தை பொறுப்பேற்க ஆஸ்பத்திரி கோரிக்கை

சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மரணமானவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு உறவினர்களிடம் வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்லன் மகேஸ்வரன் (வயது - 54) என்பவரின் சடலமே வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நோய் காரணமாக இறந்த குறிப்பிட்ட நபரின் சடலம் பழுதடையும் நிலையில் உள்ளது. எனவே உறவினர்கள் சடலத்தைப் பொறுப்பேற்க வேண்டும் என நிர்வாகத்தினர் மேலும் கேட்டுள்ளனர். (202-207)

# ஆங்கில தின மாகாண மட்டப் போட்டி; வெற்றி பெற்ற யாழ். மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27

வடமாகாண ஆங்கில தினப் போட்டிகள் அண்மையில் வவுனியாவில் நடைபெற்றன. இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

கிரகித்து எழுதுதல்:

*தரம் - 7 - 2ஆம் இடம்* - ஆர். தேனுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), *தரம் 8 - 3ஆம் இடம்* - என். கிருத்திகன் (சென். ஜோன்ஸ்), *தரம் 9 - முதலாமிடம்* - எஸ். கனிஷா (உசன் இராமநாதன் கல்லூரி), *தரம் 10 - 2ஆம் இடம்* ஆர். சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), *தரம் - 11 - முதலாமிடம்* வி. நிஷாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), *தரம் - 12- 3ஆம் இடம்* எஸ். சிவாஜினி (வேம்படி மகளிர் கல்லூரி), *தரம் 13 - 3ஆம் இடம்* - என். ஷாகினி (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), *தரம் 13 - 3ஆம் இடம்* எம். துளசிவதனா (வேம்படி மகளிர் கல்லூரி).

உறுப்பெழுத்து

*தரம் - 4 முதலாமிடம்* - ரி. லக்ஷிகா (யாழ். இந்து ஆரம்பம் பாடசாலை), *தரம் - 4 - 2ஆம் இடம்* எஸ். சுபநிலா (ஜோண் பொஸ்கோ), *தரம் - 5 - முதலாமிடம்* எஸ். ஜெயசக்தி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), *தரம் 5 - 2ஆம் இடம்* ஆர். அபிராமி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), *தரம் - 6 - முதலாமிடம்* டி. மேரிதெபோறா (திருக்குடும்பக் கன்னியர்மடம்), *தரம் - 7 - முதலாமிடம்* எம். சோபிதன் (யாழ். இந்துக் கல்லூரி), *தரம் - 7 - 3ஆம் இடம்* எ. கமலினி, (திருக்குடும்ப கன்னியர்மடம்), *தரம் - 12 -3ஆம் இடம்* எஸ். தர்சிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

சொல்வதெழுதல்

*தரம் - 7 - 2ஆம் இடம்* - ஆர். வரணிதா (வேம்படி மகளிர் கல்லூரி), *தரம் - 7 - 3ஆம் இடம்* - ரி. ஆதிரை (மீசாலை வீரசிங்கம் ம.வி.), *தரம் - 8 - முதலாமிடம்* - ஆர். ரம்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), *தரம் - 9 - 2ஆம் இடம்* வை. தபீதா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), *தரம் - 9 - 3ஆம் இடம்* - பி. கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), *தரம் - 10 - முதலாமிடம்* - ஆர். சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), *தரம் - 11 - முதலாமிடம்* - வி. நிசந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), *தரம் - 12 - 3ஆம் இடம்* - என். லக்ஷ்சிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), *தரம் - 13 - முதலாமிடம்* - எஸ். சுஜன் (யாழ். இந்துக் கல்லூரி), *தரம் 13 - 2ஆம் இடம்* - ஜே. டினோஷாமாலினி (வேம்படி மகளிர் கல்லூரி).

பா ஓதல்

*தரம் - 3 - முதலாமிடம்* - ஏ.எம். பெஞ்சமின் (யாழ்ப்பாணக் கல்லூரி), *தரம் 4 - 2ஆம் இடம்* - ஜே. என். சர்வியோ (ஜோண் பொஸ்கோ), *தரம் - 5 - முதலாமிடம்* - எம். தரண்யா (மகாஜனக்கல்லூரி), *தரம் 6 - முதலாமிடம்* - எச். கனாநஜா (சுண்டுக்குளி ம. கல்லூரி), *தரம் - 7 - முதலாமிடம்* - ஏ. கீர்த்திகா, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), *தரம் - 7 - 3ஆம் இடம்* என். நிக்சலா (உடுவில் மகளிர் கல் லூரி), *தரம் 8 - 3ஆம் இடம்* ஜி. யாதவி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), *தரம் - 9 - முதலாமிடம்* - பி.ஏ. ஜெனினோல்ட் நிவாகரன் (சென். பற்றிக்ஸ்), *தரம் - 10 - 2ஆம் இடம்* - பி. நந்திகரன் (யாழ். இந்துக் கல்லூரி), தரம் - 10 - 3ஆம் இடம் - எம். ரொசின் மிலானி (இளவாலை கன்னியர்மடம் ம.வி.).

பேச்சு - தயார்படுத்தப்பட்டது

*தரம் - 12 - முதலாமிடம்* - ஜி.எச். ஷென்ஸ்மன் (சுண்டுக்குளி மகளிர்), *தரம் - 13 - 2ஆம் இடம்* - ஜி. விக்கினர் (யாழ். இந்துக் கல்லூரி).

பேச்சு - தயார்ப்படுத்தப்படாதது

*தரம் - 12 - 3ஆம் இடம்* - எஸ். கஜலக்ஷி (உடுவில் மகளிர்),

*தரம் 13 - 2ஆம் இடம்* - என். சாகினி (இளவாலை கன்னியர்மடம் ம.வி.).

நாடகம்

ஆரம்பப்பிரிவு - 2ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி, கனிஷ்ட பிரிவு - முதலாமிடம் - உடுவில் மகளிர் கல்லூரி, சிரேஷ்ட பிரிவு - முதலாமிடம் - திருக்குடும்பக் கன்னியர்மடம்.

இலக்கிய நாடகம்

சிரேஷ்டபிரிவு - 2ஆம் இடம் - உடுவில் மகளிர் கல்லூரி.

(203-88-202-86)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 11 : | ஞாயிற்றுக்கிழமை 28.10.2007 |
| திதி : துதியை | காலை: 06.26 |
| நட்சத்திரம் : | கார்த்திகை பிற்பகல் : 04.36 |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீதான தாக்குதலில் களப்பலியான சிறப்புக் கரும்புலிகளின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்றுகிளிநொச்சியில் நடைபெற்றது. சிறப்புக் கரும் புலிகளின் திருவுருவப்படங்களை அணிவகுப்பு மரியாதையுடன் புலி உறுப்பினர்கள் தாங்கிச் செல்வதை படங்களில் காணலாம்.

# ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'லைசென்ஸ்' அரசினால் திடீரென ரத்து!

## 'சூரியன்','ஹிரு', 'ஷா', 'சன்', 'கோல்ட்' எவ்.எம். சேவைகள் தடைப்பட்டன

கொழும்பு, ஒக். 27

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தனியார் சேவையின் அனுமதிப்பத்திரம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் திடீரென அரசினால் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

இதனை ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

இந்த அனுமதிப்பத்திர ரத்துக் காரணமாக அந்த நிறுவனத்தின் கீழ் ஒலிபரப்பாகும் 'சூரியன்' தமிழ்ச் சேவை, 'ஹிரு' மற்றும் 'ஷா' சிங்கள சேவைகள், 'சன்' மற்றும் 'கோல்ட்' ஆங்கில சேவைகளின் எவ்.எம். அலைவரிசை ஒலிபரப்பு முற்றாகச் செயலிழந்தது.

அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்டமை குறித்து ஊடக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மேலும் கூறியவை வருமாறு:-

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கடந்த புதன் இரவு நாட்டில் பரபரப்பையும் இனங்களுக்கு இடையில் மோதலையும் ஏற்படுத்தும் வகையில் தவறான செய்தி ஒன்றை ஒலிபரப்பியது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரங்மினிதென்ன என்ற கிராமத்திற்குள் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர் என்றும் விறகு வெட்டச் சென்ற கிராமத்தவர்கள் ஐந்துபேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

இதனால் அப்பிரதேச மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டதுடன் பலர் இடம்பெயரவும் ஆரம்பித்து விட்டனர். எனினும் அரசு உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக அங்கு அமைதி ஏற்படுத்தப்பட்டதுடன், இந்தச் செய்தியில் எந்த விதமான உண்மையும் இல்லை என்பதும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

துரித கதியில் மேற்கொள்ளப்பட்ட சமயோசிதமான நடவடிக்கையினால் விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டன.

இவ்விடயம் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் பூர்வாங்க விசாரணை ஒன்றை நடத்தினார்.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் தனது விசாரணையின் பின் சமர்ப்பித்த அறிக்கையின்படியே ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தனியார் ஒலிபரப்பு நிலையத்தின் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்த நடவடிக்கை தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பது குறித்து இப்போது கருத்து எதுவும் வெளியிட முடியாது. - என்றார் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா. (சி)

## வான் பரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அநுராதபுரம் விமானத்தளம் மீது பெரும் தாக்குதலை நடத் திய நான்கு நாள்களின் பின்னர் விமானப் படைத் தளபதி இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததா வது:

நாட்டின் வான் பரப்பில் சில பகுதிகளின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்க முடியாது. ஆனால் சில பகுதிகள் ஊறுபடக்கூடியவை. நாங்கள் சில பகுதிகளை பாதுகாத்துள்ளோம். எங்களுக்குத் தேவையானவற்றை நாம் பெறு மட்டும் இலங்கையின் வான் பிரதேசம் முழுவதையும் (அதாவது நாடு முழுவதையும்) காப்பாற்ற முடியாது. தாக்குதலுக்குள்ளாகக் கூடியாதாக பல பகுதிகள் உண்டு. முழுமையான வான் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்த இன்னும் 5 அல்லது 6 வருடங்கள் ஆகலாம்.

விடுதலைப் புலிகளின் அநுராதபுரத்தாக்குதல் விமானப்படைக்கு ஒரு சவால் அல்ல. அதனால் சுமார் 15 மில்லியன் டொலர்கள் மட்டுமே இழக்கப்பட்டுள்ளன -என்றார்.

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார கூறியவை வருமாறு:-

புலிகள் தற்கொலை அங்கிகளை அணிந்திருந்தனர். இதனால் அவர்களின் உடல்களை டிரக்டரில் ஏற்றி பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்குக்கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டது.

அதேவேளை, பிரேத பரிசோதனை செய்ய முடியாமல் வைத்தியசாலை ஊழியர்களும், வைத்தியர்களும் சிரமத்தை எதிர்நோக்கினர். இதன் காரணமாகவே ஆடைகள் அகற் றப்பட்டன.

ஆனால், இதற்குப்பிழையான அர்த்தம் கொடுத்து பாதுகாப்புப் படையினரின் பெயரை கெடுக்க எவரும் முயற்சிக்க வேண்டாம் - என்றார். (சி)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதிக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் அணி ஒன்று சரமாரியாக துப் பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர் என்றும் அதற்குப் பதில் தாக்குதல் நடத்திய வேளையிலேயே அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டது என்றும் படைத்தரப்பினர் கூறியிருக்கின்றனர். இருப்பினும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இந்தச் சம்பவம் தொடர்பாக எதுவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை. (சி)

## புதிதாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாக புதியனவற்றை உடனடியாகத் தருவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கொள்வனவுக்கு உதவ பல்வேறு நாடுகள் எம்முடன் தொடர்பு கொண்டுள் ளன. வெளிப்படையான சில காரணங்களால் அந்த நாடுகளின் பெயர்களை வெளியிட இயலாது.

அரசாங்கத்தின் அனைத்து அலுவல்களை யும்விட விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விடுதலைப் புலிகள் தங்களது இலக்கை அடைவதற்காக உணர்வுபூர்வமான இடங்களில் மேலதிக தாக்குதல்களை நடத்தக்கூடும். விடுதலைப் புலிகளை முற்றாகத் தோற்கடிக்கும்வரை இத்தகைய தாக்குதல்களைத் தடுக்க முடியாது. பொதுமக்கள் இதனை உணர்ந்து அனைத்து நேரங்களிலும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

அநுராதபுரம் தாக்குதலுக்கு பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் உதவியிருக்கிறார்களா என்பது குறித்த உள்ளக விசாரணைகள் முன்னேற்றமடைந்துள்ளன. காவல்துறை மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றார் பசில் ராஜபக்ஷ. (அ-1)

## சண்டே லீடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரின் சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

முன்னதாக விசாரணைக்கு என்று கூறி கல்கிஸையிலுள்ள தனது இல்லத்திலிருந்து தன் தாயாருடன் 4ஆம் மாடிக்கு குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்ட வாமணன் நேற்றுமுன்தினம் மாலை வரை தீவிர விசாரணைகளை எதிர்கொண்டு வந்தார்.

பின்னர் கல்கிஸை பதில் நீதிவான் முன் னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட வாமணனை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதைத் தொடர்ந்து வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டார்.

அமைச்சர் மனோ விஜேரத்னவின் மனை வியின் கைத்தொலைபேசிக் கட்டணமான 87 ஆயிரம் ரூபா பணத்தை இரத்தினக்கல் ஆபரணக் கூட்டுத்தாபனம் செலுத்திய விவகாரம் தொடர்பான செய்திக் கட்டுரையை பிரசுரிக்காது தவிர்க்க வாமணன் 5 லட்சம் ரூபா பணத்தை வழங்குமாறு அமைச்சரிடம் கோரினார் எனக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்தக் கைதுச் சம்பவம் இடம்பெற்றமை தெரிந்ததே. (சி)





அநுராதபுரம் விமானப் படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகளால் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த விங் கொமாண்டர் அமிலமொஹோதியின் இறுதி ஊர்வலம் நேற்று குருநாகலில் இடம்பெற்றது. அவரது பூதவுடல் பேழையை விமானப் படையினர் அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்வதைப் படங்களில் காணலாம்.

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிக்கும் நோக்கில் இலங்கையில் ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஒன்று நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை நீங்கள் வலியுறுத்தினீர்கள்.

ஆனால், இலங்கை அரசு நீங்கள் விடுத்த இந்த வேண்டுகோளை முற்றாக நிராகரித்து விட்டது. அது குறித்து நாம் மிகுந்த கவலை யடைகிறோம்.

இந்த நிலையில் புலிகள் அநுராதபுர விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதல் அரசிற்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியதோடு இராணுவ ரீதியில் அரச தலைவர்களின் மன சமநிலைத் தன்மையை குழம்பச் செய்துள்ளது.

அது மாத்திரமின்றி அநுராதபுரத் தாக்குதலில் உயிரிழந்த புலிகளின் சடலங்களைப் புலிகளிடம் கையளிக்காது அந்த உடல்களில் இருந்து ஆடைகளை அப்புறப்படுத்தி முழு நிர்வாணப்படுத்தி அவற்றை மக்களின் பார்வைக்கு அரசு வைத்துள்ளது. அவ்வாறு நிர்வாணமாக்கப்பட்ட சடலங்களில் பெண் புலிகளின் உடல்களும் அடங்குகின்றன.

அரசின் இந்தச் செயற்பாடானது வழமையான யுத்தச் செயற்பாட்டு முறைகளை மீறும் போக்காகும். அது மாத்திரமன்றி இது ஜெனிவா உடன்படிக்கைக்கு உட்பட்ட யுத்த நடைமுறைகளை மீறும் இந்த அரசின் நாகரிகமற்ற செயற்பாடாகவும் அமைந்துள்ளது.

இந்த நிலைமையானது இலங்கையில் - குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிரான - பாரிய யுத்தம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது என்ற அச்சத்தைத் எம்மத்தியில் தோற்று வித்துள்ளது.

இலங்கை அரசின் கண்மூடித்தனமான - எல்லைமீறிய - கொடுங்கோண்மையான இன அழிப்பு நடவடிக்கையில் இருந்து இலங்கையில் உள்ள தமிழ்த் தேசத்தைக் காப்பது குறித்து ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு விளக்கி உரிய நடவடிக்கையை எடுக்கவைப்பது மிகவும் கட்டாயமானதாகவும், அவசரமானதாகவும் ஆகியுள்ளது - என்றுள்ளது. (சி)


FEELS LIKE HEAVEN
Clearing Price Offer
DDR1 256 Kingston 2950/-, DDR2 256 1950/-
DDR1 512 4100/- DDR2 512 Kingston 3100/-
Power Tree UPS
ATX/LGA Power Supply
HP Deskjet Printers
HP All in one Printers
(Printer, Photocopy & Scanner)
HP LaserJet Printers,
Canon LaserShot Printers
Canon Lide 25 Scanner
Genius Laptop Scanner
Wireless pointers
Games Devices
Wifi adapters
Mouse pen
Internet phone
DVD Multiplayer
Intel Pentium 3.0/2m or Dual Core 3.0/4M or Core 2 Duo Processor, Intel Original or AsRock or Asus P5 Mother Boards, 512mb / 1 Gb Memory, 80/160Gb HDD, DVD-RW, 15" CRT/LCD Monitor, Power Tree UPS, Keyboard, Mouse & Speaker
All type of mother boards, Processors, Hard disks, Memories, VGA Cards, Sound Cards, Network Items and etc includes in this OFFER
UNIT மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737



இதோ!
வெளிவந்துவிட்டது!
பொருளியல் மாணவர்களுக்காக!
நுண்பாக பொருளியல்
அறிமுகம் 1
படிப்பு வழிகாட்டி
For A/L & Higher Classes.
ஆசிரியர்: J.THAYAPARAN
B.A. (Econ) Spl. Dip. in Edu.
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org